பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 07 திங்கட்கிழமை (22-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:26

## புலிகளுடன் உடன்பாடு முறிந்துவிட்டதா? பிரபாவுக்குக் கடிதம் எழுத ஹக்கீம் முடிவு

கொழும்பு,டிசெ.22

தலைவர் பிரபாகரனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப ஹக்கீமும் கடந்த ஆண்டு ஏப்ரலில் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிந்துபோய்விட்ட ஒன்று என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருக்கின்றார். இந்த விடயம் குறித்து தலைவர் வே.பிரபாகரனுக்கு கடிதம் ஒன்று வரைவதற்குத் தான் உத்தேசித்திருக்கிறார் என ரவூப் ஹக்கீம் கூறியிருக்கிறார்.

நேற்று பி.பி.ஸியின் தமிழோசைக்கு செவ்வியளித்த அமைச்சர் ஹக்கீம் அத்தகைய கடிதம் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது எனத் தாம் கருதுகிறார் எனவும் கூறியிருக்கின்றார். அந்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்ற அடிப்படையிலும் முஸ்லிம் மக்களின் அதிகப்பட்ச ஆத ரவைப்பெற்ற தரப்பு முஸ்லிம் காங்கிரஸ் என்ற அடிப்படையிலும் இணைந்து விடுதலைப் புலிகளின் தேசியத் தலை

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானியத் தூதர் இன்று கிளிநொச்சிக்கு வருகிறார்

கிளிநொச்சி,டிசெ.22

இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் அக்கியோ சூடா இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிறார்.

இன்று காலை கொழும்பில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சிக்கு வரும் தூதர் தலைமையிலான குழுவினர் முற்பகல் 10.00 மணியளவில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்திக்கவுள்ளனர்.

சமாதான முயற்சிகளின் எதிர்காலம் மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலை என்பன குறித்து ஜப்பானியத் தூதர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்துவார்.

கிளிநொச்சி விஜயத்தை முடித்துக்கொண்டு தூதர் தலைமையிலான குழுவினர் ஏ-9 தரைப் பாதை வழியே கொழும்பு திரும்புவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதி சந்திரிகாவின் பதவி ஆறுக்குப் பதில் 7 வருடங்களா?

## அவரது பதவிப் பிரமாணம் பற்றி புதுத் தகவல்கள் கசிந்துள்ளதால் சட்ட நிபுணர்கள் மத்தியில் சர்ச்சை

கொழும்பு,டிசெம்பர்22

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தற்போதைய பதவிக் காலம் எல்லோரும் எதிர்பார்ப்பது போன்று 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் காலாவதியாகாது. 2006ஆம் ஆண்டு நவம்பர் மாதமே அது காலாவதியாகும். - இவ்வாறு தெரிவிக்கும் புதுக் கதையொன்று இப்போது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.**

இது பற்றிய விரிவான செய்திகள் கடந்த சில தினங்களாக ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அவை தெரிவிக்கும் விவரம் இவைதான்.

முதல் தடவையாக 1994 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியானார். இதன்படி, அவரது முதலாவது பதவிக்காலம் 2000ஆம் ஆண்டு நவம்பர் வரையாகும்.

எனினும், தமது முதலாவது பதவிக் காலம் முடிவடைவதற்கு சுமார் ஓராண்டுக்கு முன்பதாக - அப்போது

(18ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் படைக்கு இங்கு நினைவுத் தூபி நிறுவுவதா?

### வெகுஜன அமைப்புகள் ஆட்சேபம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

ஈழமண்ணில் இந்தியப் படையினருக்கு நினைவுத்தூபி அமைப்பதைக் கடுமையாக ஆட்சேபிக்கின்றோம்.

- யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அமைதிப்படை என்ற போர்வையில் இந்திய இராணுவம் வடக்கு - கிழக்கில் நிறுத்தப்பட்டபோது உயிரிழந்த படையினருக்கு நினைவுத் தூபி அமைக்க இலங்கை இராணுவம் எடுத்துள்ள முயற்சியை யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன், தமது ஆட்சேபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்திய இராணுவம் இலங்கையின் வடக்கு - கிழக்கை ஆக்கிரமித்தபோது எமது மண்ணின் விடுதலைக்குப் பேராபத்து ஏற்பட்டது. அப்பாவிப் பொதுமக்கள் கொன்றுகுவிக்கப்பட்டனர். இளைஞர்கள், யுவதிகள் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டனர். சித்திரவதைகள், பல்வேறு கொடூரங்கள் இடம்பெற்றன.

இவை இன்னும் எமது மக்களின்

(18ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலய நெருக்கடிக்கு தீர்வு இன்றேல் வெகுஜனப் போர்!

### அம்பாறையில் நடந்த கூட்டணி கூட்டத்தில் முடிவு

அம்பாறை, டிசெ.22

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு - கிழக்கில் உள்ள சகல பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் இருந்தும் இராணுவம் விலக்கப்பட்டு மக்கள் மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும். இல்லையேல் வடக்கு - கிழக்கு எங்கும் பெரும் எடுப்பில் வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவுசெய்துள்ளது.

கூட்டணியின் பாட்டுறைக் கூட்டம் ஒன்று அக்கரைப்பற்று கலாசார மண்டபத்தில் நேற்று முற்பகல் 10 மணி முதல் இடம்பெற்றது. அங்கு மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம் என்.ரவிராஜ், துரைராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். கட்சியின் செயலாளர்நாயகம் இரா. சம்பந்தன் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப்

(18ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மின்சாரசபை தனியார் நிறுவனமாகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.22

இலங்கை மின்சாரசபையின் வடக்குப் பிரிவு தனியார் நிறுவனமாக மாற்றப்பட உள்ளது.

அடுத்தமாதம் 20ஆம் திகதி முதல் அது தனியார் மயமாகின்றது என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபை [illegible] தனி

(18ஆம் பக்கம் பார்க்க)

### பேரினவாத சக்திகளுக்கு எதிராக

## நான்கு கட்சிகள் இணைந்து நாடாளுமன்றத்தில் போராட்டம்!

### கிளிநொச்சியில் மனோ கணேசன் தகவல்

கிளிநொச்சி,டிசெ.22


சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராக நான்கு கட்சிகள் ஒன்றிணைந்து நாடாளுமன்றில் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக மேல்மாகாண மக்கள் முன்னணிக்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து கலந்துரையாடிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

-மேல்மாகாண மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் ஒன்றிணைந்தே சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராக நாடாளுமன்றில் போராட்டம் நடத்த உள்ளன என்று அவர் அங்கு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சமாதானச்

(18ஆம் பக்கம் பார்க்க)



# மா.சபைத் தேர்தல் வேட்பாளர்கள் தெரிவை ஐ.தே.க. ஆரம்பித்தது!

## அலரி மாளிகையில் பிரதமர் தலைமையில் கலந்துரையாடல்

கொழும்பு,டிசெ.22

ஐக்கிய தேசியக்கட்சி மாகாண சபைத் தேர்தல்களுக்குத் தயாரா கின்றது. கட்சியின் வேட்பாளர்களைத தெரிவுசெய்வதில் பிரதமர் நேரடியாகப் பங்கேற்று வருகிறார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களின் வேட்பாளர்கள் தொடர்பான கலந்துரையாடல் பிரதமரின் தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

கொழும்பு மாவட்ட அமைப்பாளா அமைச்சர் எம்.எச்.முஹம்மது, கம்பஹா மாவட்ட அமைப்பாளர் அமைச்சர் கரு ஜயசூரியா, களுத்துறை மாவட்ட அமைப்பாளர் அமைச்சர் மஹிந்த சமரசிங்கா ஆகியோருடன் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிரதேச கிளைத் தலைவர்களும் இக் கலந்துரையாடலில கலந்துகொண்டனர்.

அரசுக்கு எதிராக, ஜனாதிபதியின் சகாக்களும் அரச ஊடகங்களும் மேற்கொண்டு வரும் உண்மைக்கு மாறான பிரசாரங் களை முறியடித்து, அரசின் செயற்றிட்டங்களை கிராமிய மட்டத்தில் மக்களைச் சந்தித்து பிரசாரம் செய்ய வேண்டும் என்றும் கிராமிய மட்டத்தில் தேவைகளை அறிந்து அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்தும் படியும் நாடாளுமன்ற உறுப்பினர்களை பிரதமர் பணித்துள்ளார்.

அரச ஊடகங்களைப் பொறுத்த வரையில் எதிர்க்கட்சிக்கு வழங்கப்படும வாய்ப்புக்கள் கூட அரசின் செயற்பாடுகளுக்கு இப்போது வழங்கப்படுவதில்லை எனவும் பிரதமர் அங்கு சுட்டிக் காட்டியிருந்தார்.

இதுபோன்ற தொடர் ஆலோசனைக் கூட்டங்கள் இன்று முதல் தொடர்ந்தும் நடைபெறும்.

இன்றைய சந்திப்பில் தென்மாகாண அமைப்பாளர்கள் கலந்துகொள்வார்கள என பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# பொதுத் தேர்தல் நடத்துவதால் அரசியல் பிரச்சினை தீர மாட்டாது

## கொழும்பு பேராயர் கோமிஸ் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.22

நாட்டில் நிலவும் உறுதியற்ற அரசியல் தன்மையைப் போக்க பொதுத் தேர்தலை நடத்துவது பயனற்றதாகும் என்று கொழும்பு பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் கூறுகிறார்.

மற்றொரு பொதுத் தேர்தலில் கிடைக்கும் பெறுபேறுகளும் இன்றைய நாடாளுமன்றத்திலுள்ள பலத்துக்கு பெரும்பாலும் ஒப்பானதாகவே இருக்கலாம் எனவும் பேராயர் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

இது தொடர்பாக பேராயர் கோமிஸ் மேலும் தெரிவிக்கையில்:- தேர்தலில் எந்த ஓர் அரசியல் கட்சியும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களை வெல்வது மிகவும் கடினமானதாகும். திடீர் பொதுத் தேர்தல் ஒன்றில் பெரும சொத்து அழிவும் உயிரிழப்பும் ஏற்படுவதே மிஞ்சும்.


எனவே, நாட்டையும் மக்களையும எண்ணி, ஜனாதிபதியும் பிரதமரும் இப்பிரச்சினை குறித்து நேரடியாகப் பேச்சுநடத்தி தீர்வு காணவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

### விதவைகளுக்கான நிலையம் திறப்பு

சாவல்கட்டு தாரகா விதவைகளுக்கான மலநிலையம் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு தலைவர் இ.சைலா தலைமையில் இடம்பெறும். (ஐ-185)

### ஒளி விழா

இளவாலை திருமறைக் கலாமன்றத்தின் ஒளிவிழா இன்று திங்கட்கிழமை மாலை 7மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில நடைபெறும். (ஐ)



நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகரப்பகுதி களைகட்டியிருக்கின்றது. பண்டிகைக்கால பொருள்களின் வியாபாரம் சூடு பிடித்திருக்கின்றது. வர்த்தக நிலையங்கள் அலங்கரிக்கப்பட்டு காட்சி தருகின்றன. வர்த்தக நிலையம் ஒன்றில் நத்தார்பாப்பாவின் காட்சி.

(படம்:அலுவலகப்படப்பிடிப்பாளர்)

# உளவளத்துணையாளர் பயிற்சி; முப்பது பேருக்கு சான்றிதழ்

யாழ்ப்பாணம்,டிசெ.22

'சாந்திகம்' உளவளத்துணை நிலையத்தினால் நடத்தப்பட்ட உளவளத் துணையாளர் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த சுமார் 30ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு உளவளத் துணை பயிற்சியாளர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சி வகுப்பில் வடக்கு கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் உளவளத் துணையாளர் பயிற்சியைப் பூர்த்தி செய்து வெளியேறினர்.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை யாழ. பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் திட்டமுகாமையாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம், தமிழீழ கல்விமேம்பாட்டுப் பேரவையின் யாழ் மாவட்டபொறுப்பாளர் கவியன்பன் -

'சாந்திகம்' உளவளத்துணை நிலையத்தின் தலைவர் என். கனகரட்ணம், பேராசிரியர் தயா சோமசுந்தரம் ஆகியோர் பயிற்சியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர். யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்வியியலாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் உளவளத் துணையாளர்களாக வெளியேறும் ஆசிரியர்கள், பாடசாலைகளின் மாணவர்களின் நிலை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் போதனைகளில் ஈடுபடுவோம் என்று ஒரு முகமாக சபையில் எழுந்து சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

(ஜ-5-7-86)

# புத்தளத்தில் வீதி மறியல் போராட்டம் டயர்கள் எரிப்பு; போக்குவரத்து தடை

## பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் யாழ்.அகதிப் பெண் காயமடைந்ததற்கு ஆட்சேபம்

புத்தளம்,டிசெ.22

புத்தளம் நகரில் நேற்று முற்பகல் திடீர் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. அகதி முகாம்களில் தங்கி இருப்போரும், பொதுமக்களும் வீதிகளில் இறங்கி மறியல் போராட்டங்களை நடத்தினர். வீதிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு, ரயர்களும் எரிக்கப்பட்டன. இதனால் கொழும்பு-புத்தளம் வீதிப்போக்கு வரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டன.

லொறியில் பயணம் செய்த அகதிப் பெண் ஒருவர் பொலீஸ்காரரின துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்ததை ஆட்சேபித்தும், பொலீஸாரின் நடத்தையைக் கண்டித்துமே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தை அடுத்து புத்தளம் நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பொலீஸ் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டது.

ஆயினும், ஆர்ப்பாட்டம் தொடர்ந்ததோடு டயர்கள் தொடர்ந்து எரிக்கப்பட்டன.

இதனால் பொலீஸார் நகரில் இருந்து விலக்கிக்கொள்ளப்பட்டு இராணுவத்தின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப் பட்டனர்.

புத்தளம் நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இடம் பெயர்ந்த பெண்ணொருவர் கடும் காயங்களுக்கு உள்ளானார். அவர் புத்தளம் தளவைத்திய சாலையில் சேர்க்கப் பட்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் புத்தளம் நகரில் அதிக சன நடமாட்டம காணப்பட்டது. நகர மத்தியில் காவல் கடமையிலிருந்த பொலீஸார் அவ்வழியே வந்த எல்ப் ரக லொறி ஒன்றை நிறுத்தும படி சைகை செய்தனர்.

சனநடமாட்டம் அதிகமாக இருந்ததால் லொறி உடனே நிறுத்தப்படவில்லை. லொறிச் சாரதி லொறியைச் சற்றுத் தூரம் தள்ளி நிறுத்த ஓட்டிச் சென்றபோது பொலீஸ்காரர் ஒருவர் உடனே ஓட்டோ ஒன்றில் ஏறி லொறியைப் பின்தொடர்ந்து சென்று துப்பாக்கி வேட்டைத் தீர்த்துள்ளார். இதனால் சாரதிக்கு அருகில் அமர்ந்திருந்த யாழ். நகரைச் சேர்ந்தவரும் தற்போது தில்லையடி அல்ஜித்தா மீள் குடியேற்றக் கிராமத்தில் வசிப்பவருமான சித்தி லைலா(வயது 45) என்னும் 4 பிள்ளைகளின் தாய் கடும் காயமடைந்தார்.

லொறிச் சாரதியையும் பொலீஸ் கான்ஸ்டபிள் தாக்கியுள்ளார். லொறிச சாரதியான எஸ்.எம்.மர்சூக்(வயது 45) என்பவரின் அண்ணன் மனைவியே காயமடைந்தவராவார்.

தளவைத்திய சாலையில் அவசரத் தான கட்டத்தில் சிகிச்சை பெற்று வந்த சித்தி லைலா பின்னர் ராகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொலீஸ் கான்ஸ்டபிள் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலதிக விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டுள்ளனா.

# செங்கலடி இளம் யுவதி கொலை! பாழ் கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!!

## ஏறாவூர் வாலிபர் கைதாகி விசாரணை

ஏறாவூர்,டிசெ.22

ஏறாவூரில் காளியம்மன் கோவில் வீதியில் பாழடைந்த வீட்டுக் கிணற்றிலிருந்து இளம் யுவதி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

செங்கலடி, ஆண்டான்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த சுந்தலிங்கம் நிஷாந்தினி (வயது-17) என்னும் பாடசாலை மாணவியின் சடலமே மீட்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டபின்னர் கொலை செய்யப்பட்டு சடலம் கிணற்றுக்குள் போடப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலீஸார் சந்தேகிக்கின்றனர். இக்கொலை சனிக்கிழமை இரவு நடைபெற்றிருப்பதாகவும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கிணற்றின் அருகிலிருந்து யுவதி அணிந்திருந்தார் எனக் கருதப்படும் உள்ளாடைகள் சிலவற்றையும் பொலீஸார் கண்டெடுத்துள்ளனர்.

இக்கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஏறாவூரைச் சேர்ந்த வாலிபர் ஒருவரை ஏறாவூர் பொலீஸார் கைதுசெய்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

செங்கலடி மத்திய கல்லூரியில் கல்விகற்கும் இம்மாணவி கடந்த வருட கபொத சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றினார் எனவும் தெரியவருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கோவிலுக்குச் செல்வதாகக் கூறி, வீட்டை விட்டுச்சென்ற அவர் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் தேடிய போது, பாழ் கிணற்றில் சடலம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# வடமராட்சி கிழக்கின் அபிவிருத்தி: ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஆராய்வு

வடமராட்சி கிழக்கு, டிசெ.22

யாழ்மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டிற்கான துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மருதங்கேணியில் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் தலைமையில் மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் செபத்மநாதன், கடற்புலிகளின் தளபதிகள் மங்களேஸ், விநாயகம், மறவன்மாஸ்ரர், வடமராட்சி கல்விக்கழக பொறுப்பாளர் கி.தாயகன்,யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள எம்.கே.சிவாஜிலிங்கம், அ.விநாயகமூர்த்தி மற்றும் யாழ்.செயலக அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள்.

இப்பிரதேசத்தில் இனங்காணப்பட்ட 30 விடயங்கள் தனித்தனியாக ஆராயப்பட்டு 2004 ஆம் ஆண்டு அவ்வேலைகளை முன்னெடுப்பதாகத் தீர்மானிக்கப் பட்டன.

இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இப்பிரதேசத்திற்கு அதிகாரிகள சகிதம் வந்தடைந்த யாழ்.அரச அதிபர செபத்மநாதன் கண்டிக்குளம் தொடக்கம் குடாரப்பு வரையுள்ள பத்து கிராம சேவையாளர் பிரிவுகளுக்குச் சென்று மக்களை நேரில் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார்.

(ஐ-182)

# அம்பிளாந்துறை பெற்றோல் நிலையம் நள்ளிரவில் உடைக்கப்பட்டு கொள்ளை!

காத்தான்குடி, டிசெ.22

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் இனந் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பிரதான குருமடம் விசேட அதிரடிப்படை முகாமுக்கு சுமார் 50 யார் தூரத்தில் அம்பிளாந்துறைச் சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையமே ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளையில் கொள்ளையிடப்பட்டதாக நிலையத்தின் உரிமையாளர் முருகேசு கதிரமலை தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற படுவான்கரை மக்களின் எரிபொருள் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில கடந்த 1996 ஆம் ஆண்டு இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் திறக்கப்பட்டது. நிலையத்தின் பின் கதவு உடைக்கப்பட்டு கொள்ளை நடந்துள்ளது. களுவாஞ்சிக்குடி பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### 60 மைல் தூர சைக்கிள் ஓட்டப்போட்டி

தமிழகத்தின் முன்னாள் முதல்வர், புரட்சித்தலைவர், அமரர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 16 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகத்தின் சார்பில் பண்டத்தரிப்புக்கிளை நடத்தும் 60 மைல் தூர சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்று காலை 5.30 மணிக்கு பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து சைக்கிள் ஓட்டப்போட்டி ஆரம்பமாகும் என்று பண்டத்தரிப்பு பிரதேச எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகத் தலைவர் வைத்தியகுமார் தெரிவித்தார். (ஐ-135)



# மீண்டும் மிரட்டுகிறார் பின்லேடன்!

கட்டார்,டிசெ.22

அமெரிக்காவுக்கு மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார் அல் - கெய்டா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன், வழக்கம்போல் ஒலிநாடா ஒன்றில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ள பின்லேடன், அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவிக்கும் அரபுநாடுகளையும் கண்டித்துள்ளார்.

பின்லேடனின் ஒலிநாடாவை அல் - அராபியா தொலைக்காட்சி நேற்று முன்தினம் ஒலிபரப்பியது. அதில், அரபு நாடுகளை அமெரிக்கா அடிமைகளாக ஆள முனைகிறது என்று அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

பின்லேடனின் ஒலிநாடாவில், கைது செய்யப்பட்ட சதாம் ஹுசைனைப் பற்றிய தகவல்கள் கூறப்பட்டிருக்கும் என்று முதலில் கருதப்பட்டது. ஆனால், சதாம் கைதுசெய்யப்படுவதற்கு முன்னரே அந்த ஒலிநாடாவில் பின்லேடனின் பேச்சு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனத்தின் புதிய பிரதமராக அகமது குரே பதவியேற்ற ஓரிரு நாள்களில் இந்த ஒலிநாடா பதிவுசெய்யப்பட்டிருக்கலாம் என்று அமெரிக்க உளவுத்துறை சந்தேகம் தெரிவித்துள்ளது.

இந்த ஒலிநாடாவில் உரையாற்றி இருப்பவர் உண்மையில் பின்லேடன் தானா? என்பதைக் கண்டறிவதற்கான சோதனையில் அமெரிக்க உளவுத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

அந்த ஒலிநாடாவில் மேலும் கூறியிருப்பதாவது:-

ஈராக், பலஸ்தீனம், எகிப்து, ஜோர்டான், யேமன் ஆகிய நாடுகளை அமெரிக்கா ஆள நினைக்கிறது. இந்த நாடுகளில் உள்ள முஸ்லிம்கள் அமெரிக்காவுக்கு எதிரான புனிதப் போரை ஆரம்பிக்கவேண்டும்.

கடவுளின் துணையுடன் அமெரிக்கர்களையும் அவர்களின் கூட்டணி நாடுகளின் படையினரையும் அல் - கெய்டா போராளிகள் வெற்றிகொள்வர்.

ஆப்கானிய ஜனாதிபதி அல் - கெய்டா போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தோல்வியையே தழுவுவார். அந்நாட்டு ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள ஹமீத் ஹர்சாய் விரைவில் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறும் நிலைவரும்.

ஈராக்கில் அல் - கெய்டா போராளிகளும் அந்நாட்டு மக்களும்தான் அமெரிக்கக் கூட்டுப்படைகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்திவருகின்றனர் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்லேடன் தனது உரையில் பலஸ்தீன, இஸ்ரேல் தலைவர்களைக் கடுமையாக விமர்சித்துள்ளார். இவர்கள் அமெரிக்காவுக்குப் பயந்து முடிவுகளை எடுக்கின்றனர் என்று அவர் இந்த ஒலிநாடாவில் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பின்லேடனின் வலதுகரமாகச் செயற்படும் ஐமன் அல் சவேரி பேசிய ஒலிநாடா ஒன்று கடந்த வெள்ளிக்கழமை அல் - ஜெசீரா தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்பட்டது.

அதில் - இஸ்லாமை எதிர்ப்பவர்கள் விரைவில் தோற்கடிக்கப்படுவதை முஸ்லிம் மக்கள் காண்பார்கள். ஈராக்கியத் தலைநகர் பக்தாத், இஸ்ரேலிய நகரான ஜெருசலேம், சவூதியில் மெக்கா, மதினா ஆகிய புனித நகரங்களிலும் ஆப்கான் தலைநகர் காபூலிலும் இஸ்லாம் கொடிகள் விரைவில் பெருமிதத்துடன் பறக்கும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியர்களை விடுவிக்க தலிபான்கள் நிபந்தனை

தாம் கடத்திய இரண்டு இந்தியப் பொறியியலாளர்களையும் விடுவிக்க தலிபான்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டவர்களான இவர்கள் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டனர். ஆப்கானிஸ்தான் சிறையில் உள்ள தமது இயக்கத்தைச் சேர்ந்த 50 போராளிகளை விடுதலை செய்தால் இந்தியர்கள் இருவரையும் விடுவிப்பதாகத் தலிபான்கள் கூறியுள்ளனர்.

இது குறித்து யாபூல் மாகாண அரச அதிகாரி ஒருவருக்கு தலிபான்கள் கடிதம் அனுப்பியுள்ளனர். அந்தக் கடிதத்தின் பிரதிகள் அங்குள்ள இந்தியத் தூதரகத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் தாம் நலமுடன் இருப்பதாக இந்தியப் பொறியியலாளர்கள் இருவரும் எழுதியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## லிபியா மீது குற்றச்சாட்டு

அல்கெய்டா மற்றும் இஸ்லாமிய தீவிரவாதிகள் பற்றிய ரகசியத் தகவல்களை லிபியா அரசு, பிரிட்டன் மற்றும் அமெரிக்க உளவு அமைப்புகளுக்கு அளிப்பதாக லண்டனிலிருந்து வெளியாகும் 'ஓப்சர்வர்' பத்திரிகை கூறுகிறது.

சர்வதேச சமுதாயத்துடன் இணைந்து செயற்படவும் ஐ.நா.சபை விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கவும் இது போன்ற தகவல்களை இரண்டு ஆண்டுகளாக லிபியா அளிப்பதாக அப்பத்திரிகை கூறியுள்ளது.

# கிறிஸ்மஸ் காலத்தில் தாக்குதல்கள் அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை

வாஷிங்ரன்,டிசெ.22

கிறிஸ்மஸ் காலத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்கள் நடத்தக்கூடும் என்று அமெரிக்க உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க உலக வர்த்தக மையத்தை தகர்த்தது போன்ற மிகப் பெரிய தாக்குதல் நடைபெறலாம் என்று அது எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து அமெரிக்க நகரங்களில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. ஆகாய மார்க்கமாகவும் தீவிர கண்காணிப்பு இடம்பெறுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் இது குறித்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். அசம்பாவிதங்களைத் தடுக்க மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறு படையினரும் பொலீஸாரும் எந்நேரமும் உஷார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அமெரிக்கா மட்டுமன்றி ஐரோப்பாவில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் தீவிரவாதிகள் தாக்குதல்கள் குறித்து அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது. அந்நாடுகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஓ)

# இந்திய ஆளும் கூட்டணியிலிருந்து விலகிய 4ஆவது கட்சி தி.மு.க.

இந்திய மத்திய அரசில் பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது. இந்தக் கூட்டணியில் தி.மு.கவும் இடம்பெற்று இருந்தது. மத்திய அமைச்சரவையில் தி.மு.கவின் டி.ஆர். பாலு, ராஜா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகியதாக தி.மு.க. நேற்றுமுன்தினம் அறிவித்தது. இதைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் இருவரும் நேற்று ராஜினாமா செய்தனர்.

பாஜக கூட்டணியில் இருந்து வெளியேறிய 4ஆவது கட்சி தி.மு.க. ஆகும். ஏற்கனவே காஷ்மீரின் பருக் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டு கட்சி, ராம்விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தி, அஜித்சிங்கின் ராஷ்டீரிய லோக் தளம் ஆகிய கட்சிகள் வெளியேறிவிட்டன.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள தெலுங்குதேசம், மத்திய அமைச்சரவையில் இடம்பெறவில்லை. ஆனால், பா.ஜ.க. அரசுக்கு வெளியே இருந்து ஆதரவு அளித்து வருகிறது. அதேபோல் தி.மு.கவும் வெளியே இருந்து ஆதரவு அளிப்பதாகக் கூறி உள்ளது. ஆனால், பிரச்சினைகளின் அடிப்படையில் மட்டுமே ஆதரவு அளிப்பதாக தி.மு.க. தெரிவித்துள்ளது.

தி.மு.கவை போல் ம.தி.மு.கவும் மத்திய அமைச்சரவையில் இருந்து விலகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது சம்பந்தமாக ம.தி.மு.க. நிர்வாகிகள் நாளைமறுதினம் கூடி முடிவு செய்ய உள்ளனர். (ஓ)



பெல்ஜியத்தில் நேற்றுமுன்தினம் 12 பேரைப் பலிகொண்ட விபத்தில் எரிந்து கருகிய பஸ்ஸைப் படத்தில் காணலாம்.



ஆர்ஜென்ரீனாவில் வேலையற்றவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர். தலைநகர் போனர்ஸ் அயர்ஸில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் தமக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருமாறு அரசிடம் கோரினார்கள்.

# மோசடி புரிந்த சீன அதிகாரிக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

பெய்ஜிங்,டிசெ.22

ஆற்றின் குறுக்கே பாலம் கட்டவென ஒதுக்கப்பட்ட பணத்தை கையாடிய சீன அதிகாரி ஒருவருக்கு நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அங்குள்ள யாங்கிற் ஆற்றின் குறுக்கே 3 ஆயிரம் கோடி ரூபா செலவில் பாலம் கட்டும்பணி நடந்து வந்தது. இந்தப் பணிக்கென ஒதுக்கப்பட்ட பணத்தையே இவர் கையாடினார்.

அத்துடன், பாலம் கட்டும் நோக்கில் இப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பணத்தையும் இவர் கையாடினார்.

இந்தப் பணத்திலிருந்து தனக்குச் சொந்தமான வளாகம் ஒன்றில் பிரமாண்டமான ஹோட்டல் ஒன்றையும் இவர் கட்டினார். பணத்தை இவர் கையாடிய விடயம் ஒருவாறு வெளியில் கசிந்தது.

இதனால், இவர் கைது செய்யப்பட்டார். இவர் மீதான வழக்கின் தீர்ப்பு தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள நீதிமன்றில் கடந்த வாரம் கூறப்பட்டது.

வழக்கின் தீர்ப்புப் படி இவருக்கு கடந்த சனிக்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. சீனாவில் மோசடிக் குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு இவ்வாறான தண்டனை வழங்கப்படுவது சகஜம்.

# கஞ்சா கடத்திய படகுகள் அமெ. படையிடம் சிக்கின!

வாஷிங்ரன்,டிசெ.22

கஞ்சா கடத்திச்சென்ற இரண்டு படகுகளை வளைகுடாக் கடலில் வைத்து, அமெரிக்கக் கடற்படையினர் கைப்பற்றினர். அந்தப் படகுகளில் இருந்த 21 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

முதலாவது படகில் இரண்டு தொன் கஞ்சா இருந்தது என்றும் இரண்டாவது படகில் ஆயுதங்களும் குறிப்பிட்டளவு கஞ்சாவும் இருந்தன என்றும் அமெரிக்கக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த படகுகள் இரண்டும் அல் கெய்டா இயக்கத்தினுடையவை என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், இதுகுறித்து மேலும் தகவல்களைத் தெரிவிக்க அவர்கள் மறுத்துவிட்டனர்.

வளைகுடாக்கடலில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த 'யு.எஸ்.எஸ். டிகாடர்' என்ற போர்க் கப்பலில் இருந்த அதிகாரிகளே இந்த இரண்டு படகுகளையும் கைப்பற்றினர். ஒவ்வொன்றும் 40 அடி நீளமுள்ள அந்தப் படகுகள் எங்கிருந்து வந்தன?, எங்கே சென்றுகொண்டிருக்கின்றன? போன்ற விவரங்களைத் தெரிவிக்க அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

ஆப்கானிஸ்தானில் பயிரிடப்பட்ட கஞ்சாவை ஏற்றிக்கொண்டே இந்தப் படகுகள் வந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் உளவுத் துறையினர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே இந்த இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டன என்று அமெரிக்க போர்க் கப்பலில் இருந்த அதிகாரியான எட்மிரல் ஜிம்ஸ் டாவிரிட்ஸ் தெரிவித்தார்.

## உலக அரங்கில்

### பலஸ்தீன பிரமுகர் கைதானார்

பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பின் முக்கிய நிர்வாகி அத்னான் அஸ்பார் (வயது 40) என்பவரை இஸ்ரேல் இராணுவம் நேற்றுக் கைது செய்தது.

ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்தவர் அவர். நப்லஸ் பகுதியில் அவரது தந்தையார் வீட்டில் அவர் பிடிபட்டார். இரு ஆண்டுகளாக இஸ்ரேல் இராணுவம் அவரைத் தேடி வந்தது.

### ஈரானில் நால்வருக்கு தூக்கு!

வீடு புகுந்து பெண்ணொருவரை வல்லுறவுக்கு உட்படுத்திய நால்வர் ஈரானில் பொதுமக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டனர்.

ஈரான் வடபகுதியில் உள்ள ஓரிடத்தில் இத்தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன.

இவர்களுக்கு சுமார் 3 ஆயிரம் பேர் முன்னிலையில் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

கடுமையான இஸ்லாமியச்சட்டத்தை பின்பற்றிவரும் ஈரானில், இந்த ஆண்டு மட்டும் 40 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# அமெ.அதிபர் மாளிகையில் மர்மத்தூளால் பரபரப்பு

வாஷிங்ரன்,டிசெ.22

வெள்ளை நிறத்தூள் இருந்ததையடுத்து அமெரிக்க அதிபர் மாளிகையில் ஒரு புறக்கதவு நேற்றுமுன்தினம் சிறிதுநேரம் மூடிவைக்கப்பட்டது. இதனால் பரபரப்பு நிலவியது.

அந்தத் தூள் 'அந்திரக்ஸ்' கிருமியாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் சோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அது என்ன என்பதை கண்டுபிடிக்க இயலவில்லை என்றாலும் அதனால் ஆபத்து இல்லை என்பது உறுதியானது. அதன் பிறகே நடைபாதை மற்றும் கதவு மீண்டும் திறக்கப்பட்டது.

மர்மத்தூளை வைத்தது யார்? எதற்காக வைத்தனர்? என்பது தெரியவில்லை என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இந்திய சாஸ்திரியார் யாழ். வருகை

இரண்டாவது முறையாக இந்திய சாஸ்திரியார் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார். சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்பெற்ற பரம்பரை ஜோதிடர்

ஸ்ரீசாமியே சரணம் ஐயப்பா
ஓம்சக்தி அருள்பெற்ற **P.T.R.** அவர்கள்
சாமியே சரணம் ஐயப்பா

கைரேகை, ஜாதகம், மன்கணிதம் மற்றும் எந்தப் பிரச்சினையானாலும் நேரில் சந்திக்கவும். திருமணத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? தொழிலில் பிரச்சினையா? தீராத வியாதியா? காதலில் தோல்வியா? உயர்கல்வித்தடையா? குடும்பத்தில் பிரச்சினையா? வெளிநாடு செல்லப் பிரச்சினையா? குழந்தைப் பாக்கியமில்லையா?

எதுவாயிருப்பினும் நேரில் சந்திக்கவும்.
யாழ். உல்லாச விடுதி
No: 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
வெலிங்டன் சந்தி அருகில், பெருமாள் கோயில் வீதி, (பழைய லிங்கம் கூல்பார் அருகில்)


## யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### முக்கிய அறிவித்தல்

பருத்தித்துறை இறங்குதுறையிலிருந்து பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு சங்கப் பதிவிலுள்ள பாரவூர்திகள் அனைத்தும் 23.12.2003 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முன்னர் சங்கப் பணிமனையில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

215, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (26165) (24-11-16)

தலைவர், செயலாளர்,
யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



HAPPY BIRTHDAY

### செல்வன் ச. குதூகலப்பிரியன்

யாழ்ப்பாணம், இல. 66/02, 5 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியைச் சேர்ந்த
சக்தியதாசன் - சுஜாதா தம்பதியரின்
செல்வப் புதல்வன் **குதூகலப்பிரியன்**

தனது முதலாவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் இன்று (22.12.2003) திங்கட்கிழமை குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

குதூகலனை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், சகோதரர்மார், சகோதரிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், பெரியோர்கள் நாச்சியம்மன் துணை வேண்டி சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

N.S.தாசன்,
66/02, 5 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (26109) (26-24-11-16)

தகவல்:
அன்பு அப்பா.

## மேஜர் முரளி நினைவு நிகழ்வு

வலி.வடக்கு,டிசெ.22

இந்திய அமைதிப் படையுடனான மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட மேஜர் முரளி மற்றும் போராளிகளினது 16 ஆவது ஆண்டு நினைவு நாள் நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு உரும்பிராய் - கோப்பாய் வீதியில் உள்ள நினைவுத் தூபியில் இடம்பெறவுள்ளது.

காலை இடம்பெறும் இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தமிழீழ மாணவர் பேரவையினர் இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஓ-86)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

சாவகச்சேரி, டச்றோட் வீதியில் ஒரு தங்க நகை கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்கள் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
**கணபதிப்பிள்ளை குகனேசன்**
'மங்களா பவனம்',
றெயில்வே லேன், கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(26164) (24-11-16)

## விற்பனையாகின்றன

றோல் கலண்டர்கள், டயறிகள் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அச்சுப் பதிப்பும் செய்துகொள்ளலாம்.

தொடர்பு:
**பிரியங்கா புத்தகசாலை**
பிரதான வீதி, பருத்தித்துறை.

## A/L 2006

பௌதிகவியல் வகுப்புகள் ஆரம்பம்

**அ.யோகானந்தா**
49, ராஜ வீதி,
கல்வியங்காடு, நல்லூர்.
காலம்: 25.12.2003
காலை 8.00 மணி.
(26097)

## BEACON STUDY CENTRE

Vathiry, Karaveddy.

### A/L 2006

கணித, உயிரியல் பிரிவு
ஆரம்பம்: 24-12-2003 (புதன்)
முற்பகல் 11.30 மணி.

(26153) (34-24-11-16)

## கண்ணீர் அஞ்சலி

எமது கூட்டுத்தாபனத்தின் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் பணியாற்றிய

### பொன்னுத்துரை ஐயாத்துரை



தோற்றம் 17-12-1945
மறைவு 17-12-2003

அவர்கள் இயற்கை எய்தியமையையிட்டு ஏற்பட்ட பிரிவால் வாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அவரது அன்பான செயல்களும், பண்பான நடைமுறைகளும் எம்மவர் உள்ளங்களில் அவரை அன்பிற்கும் பாசத்திற்கும் உரியவராக்கியது எனலாம். அன்னாரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது; ஆயினும் அவரது நினைவுகள் எம்முன்னே அழியாது நிலைத்தே இருக்கும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன தலைமைக் காரியாலயம் (கொழும்பு) நிறைவேற்று உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.**

▲ நேற்றைய உதயனில் வெளியான இதே விளம்பரத்தில் அமரர் பொ.ஐயாத்துரையின் புகைப்படத்திற்குப் பதிலாக மற்றொரு புகைப்படம் பிரசுரமாகியது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலி,
பத்திரகாளி கோயிலடி
விஸ்வகுலதிலகர்
**சதாசிவம் சின்னையா ஆசாரியார்**

அவர்கள் 19.12.2003இல் இயற்கையெய்தியமையையிட்டு நாம் மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவரது ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல அன்னை ஸ்ரீபத்திரகாளித்தாயின் திருவடி பணிகின்றோம்.

திருநெல்வேலி. (சி-33182) (26-24-11-16) - உறவினர்கள்.


## இதோ! யாழ்நகரில்!

### SILVER SHIELD SOCKS





குழந்தை முதல் பெரியோர் வரை சகலருக்கும்
COTTON & NYLON SOCKS
பாடசாலை மாணவர்களுக்கேற்ற
SOCK'S & STOKINGS
விளையாட்டு வீரர்களுக்கேற்ற சொக்ஸ் வகைகள்
எதுவானாலும்
மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:

**SRI MURUGAN COMMUNICATION**
No.303, K.K.S. ROAD, JAFFNA.
T.P.: 021-222 5392
(C/32186) (26-24-11-16)


## மீளாத் துயரில் ஈராண்டு



### செல்வி பிரதீபா சந்திரசேகர்

(யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரி)

தோற்றம் 31.07.1989
மறைவு 11.12.2001

ஆண்டிரண்டு போனதுவோ
என்மகளே உனை இழந்து?
நினைவுகள் அழநெஞ்சில்
நெருப்பாக எரிகின்றது!
தாய்மடி தேடு! தீபா உன்னைத்
தாங்கிய உள்ளங்கள் எல்லாம்
தவித்தல்லோ வாடுது இங்கே!
மீள உன் வரவுக்காய் மனம்
ஏங்கித் தவிக்கிறதே தீபா
உன்னருகே வரும் பொன்னாளுக்காய்
காத்திருக்கிறேன் மகளே!

19, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி. (26163) (26-24-11-16)

உன் பிரிவால் தவிக்கும்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### விஸ்வகுலதிலகர் சதாசிவம் சின்னையா ஆசாரியார்

(அதிபர், சின்னையா இரும்புத் தொழிலகம்)

திருநெல்வேலி, பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சின்னையா ஆசாரியார் அவர்கள் 19.12.2003 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் இளையதம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அருமைக் கணவரும் கலைச்செல்வன் (லண்டன்), லதா (நோர்வே), திருவருட்செல்வன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுகந்தமலர் (லண்டன்), ரவீந்திரநாதன் (நோர்வே), யசோதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் சிவனடியான், சிவகுருநாதன் (நல்லையா), செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் முத்துலிங்கம், இரத்தினசிங்கம் (சின்னராசா - கனடா), பழனித்துரை (ஜேர்மனி), மகாலட்சுமி, நாகலோகதேவி, திலகவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கலைச்செல்வி (நோர்வே), அனுசன் (நோர்வே), ஹரிகரன் (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
T.P. 077-6167334
021-2223475
021-2225521 (சி-32181) (26-24-11-16)

தகவல்:
மனைவி, மக்கள்.

# எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரம் குடாநாட்டில் நாளை ஆரம்பம்

வலி.வடக்கு,டிசெ.22

எய்ட்ஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு வாரம் நாளைமுதல் 28ஆம் திகதிவரை குடாநாட்டில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. தமிழீழ சுகாதாரத்துறையினரும், அரசியல்துறையினரும் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளனர்.

எய்ட்ஸ் நோயின் தாக்கம் குடாநாட்டில் அதிகமாக உள்ளதாக மருத்துவ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கலாசாரத்தைப் பேணும் குடாநாட்டில் இந்நிலை ஏற்பட்டுள்ளமை குறித்து பலரும் கவலை வெளியிட்டு வருகின்றனர்.

இதனையடுத்து, எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரத்தையொட்டி, வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, யாழ்ப்பாணம், நல்லூர், தீவகம் ஆகிய கோட்டப் பிரிவுகளில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொதுமக்களிடையே எய்ட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில், மாணவர்கள், அரச ஊழியர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் விழிப்புணர்வு வாரத்தையொட்டி நாளை நடத்தப்படவுள்ளன.

அத்துடன், வீடுவீடாகச் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது, அனைத்து மட்டங்களிலும் கருத்தரங்குகளை நடத்துவது போன்ற செயற்பாடுகளும் விழிப்புணர்வு வாரத்தில் இடம் பெறவுள்ளன.

(ஒ-86)

## உதயன்

## தமிழகத்தில் கூட்டமைப்புக் குழப்பம்

குழப்பங்களுடன் கூடிய அரசியல் கூட்டணிகளை உருவாக்கும் சிறப்பு இந்திய அரசியலுக்கே பொதுவானது. அதிலும் தமிழகத்தின் நிலைமையோ மிகச் சிறப்பானது.

அங்கு மற்றொரு கூட்டணிக் குழப்பத்துக்கு அச்சாரமிடப்பட்டாகிவிட்டது.

மத்தியில் ஆட்சி அமைத்திருக்கும் பாரதீய ஜனதாக் கட்சியின் அரசிலிருந்து வெளியேறுவதாக திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்துவிட்டது. எனினும், வெளியில் இருந்து கொண்டு பிரச்சினைகளின் அடிப்படையில் - விடயங்களைப் பொறுத்து - அரசுக்கு தி.மு.க. ஆதரவு அளிக்கும் என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி அறிவித்திருக்கின்றார்.

அதாவது, மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. அமைச்சர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்வார்கள். நாடாளுமன்றத்தில் தி.மு.கவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பிக்கள், எதிர்க் கட்சியினரின் வரிசைகளில் போய் அமர்வார்கள். ஆனால், அரசைக் கவிழ்க்கமாட்டார்கள். பிரச்சினைகளின் அடிப்படையில் ஆதரவு என்ற ரீதியில் அரசுக்கான ஆதரவு தொடரும்.

பாரதீயஜனதாக் கூட்டணியில் 1999இல் தி.மு.க. சேர்ந்தது. அப்போது நடந்த பொதுத் தேர்தலில் அந்தக் கூட்டணியே மத்தியில் ஆட்சியைப் பிடித்தது. அக்கூட்டணியில் அங்கம் வகித்த தி.மு.க. ஆட்சியிலும் பங்குகொண்டது. தி.மு.க. பிரதிநிதிகளான முரசொலிமாறன், டி.ஆர்.பாலு உட்பட பலர் அமைச்சர்களாயினர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக மத்தியில் இந்தக் கூட்டமைப்பு நீடித்தாலும், மாநிலத்தில் தி.மு.க. - பாரதீய ஜனதா கூட்டு எப்போதோ முறிந்துவிட்டது. அதனை தி.மு.க. தலைவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே பகிரங்கமாக அறிவித்திருந்தார். மத்தியில் நூலிழையில் தொங்கிக்கொண்டிருந்த இருகட்சி உறவு இப்போது துண்டிக்கப்பட்டுவிட்டது.

பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டமைப்பிலிருந்து தனது கட்சியை விடுவிக்க தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி விரும்புகின்றாரே தவிர, பாரதீய ஜனதா அரசைக் கவிழ்க்க அவர் நினைக்கவேயில்லை.

பாரதீய ஜனதாக் கட்சி முழுக்க முழுக்க 'இந்துத்துவ கொள்கையில்' ஊறிப்போன அமைப்பு. மத சார்பின்மைக்கும் அக்கட்சிக்கும் தொடர்பேயில்லை என்பது உலகறிந்த இரகசியம். இந்த விடயத்தில் தி.மு.க. முற்றிலும் மாறானது. ஆனால், அ.தி.மு.க. தலைவியும் தமிழக முதல்வருமான ஜெயலலிதாவே இந்துசமய ஆதரவுப் போக்குடையவர்.

இந்த அடிப்படையில் பார்த்தால், பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டுத்தான் பொருத்தமாக இருந்திருக்கவேண்டும். அத்தகைய கூட்டு 1998 இல் இருந்தது. ஆனால், ஜெயலலிதாவின் வழமையான 'திமிர்'ப் போக்கால் அக்கூட்டு உடைந்ததோடு வாஜ்பாய் தலைமையிலான முன்னைய அரசு பதின்மூன்று மாதத்தில் பதவி இழக்கவும் வேண்டியதாயிற்று.

அதன்பின்னரே பா.ஜ.க. - தி.மு.க. கூட்டு ஏற்பட்டது. இப்போது அந்தக் கூட்டு உடைந்தாலும் - கூட்டிலிருந்து வெளியேறினாலும் - அரசைக் கவிழ்க்கும் எண்ணமோ, முயற்சியோ தி.மு.கவிடம் இல்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ('பொடா' சட்டத்தை) தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மாநில அரசு தவறாகப் பயன்படுத்தி வருவது குறித்து உரிய நடவடிக்கை எடுத்து நிலைமையைச் சீர்செய்யாமல் மத்திய அரசு தொடர்ந்து மெத்தனப்போக்கைக் கடைப்பிடித்து வந்தமை -

தி.மு.கவுக்கு எதிராகவும், அ.தி.மு.கவுக்கு ஆதரவாகவும் பாரதீய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர்கள் தொடர்ந்து வெளியிட்டுவந்த கருத்துக்கள் குறித்து நடவடிக்கை எடுக்காமல் அதுவிடயத்தில் பாரதீய ஜனதா தலைமை தொடர்ந்து அசிரத்தைப் போக்கை வெளிப்படுத்தி வந்தமை -

'பொடா' சட்டத்தை எதிர்த்து கடந்த 15ஆம் திகதி மாநிலம் தழுவிய ரீதியில் தி.மு.க. நடத்திய மறியல் போராட்டம் குறித்து பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு, 'அரசுடன் ஒரே கூட்டமைப்பில் இருக்கும் கட்சியொன்று இவ்வாறு போராட்டம் நடத்துவது அரசியல் ஆரோக்கியம் அல்ல' என்று விமர்சித்தமை -

இவைபோன்ற அம்சங்களே கூட்டமைப்பை 'பொடார்' என்று தி.மு.க. போட்டுடைக்கக் காரணம் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தக் கூட்டமைப்பு முறிவின் அடுத்த கட்டம் என்ன? தி.மு.க. - காங்கிரஸ் கூட்டு ஏற்படுமா? அ.தி.மு.க. - பாரதீய ஜனதா உறவு உருவாகுமா?

அடுத்த ஆண்டு பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னர் புதிய கூட்டமைப்புக்கள் குறித்து பல்வேறு முடிவுகள் வெளிவரலாம் என எதிர்பார்க்கலாம்.

# அச்சுவேலியில் வருட முற்பகுதியில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை

## ஏற்பாடுகள் துரிதகதியில்

அச்சுவேலி,டிசெ.22

அச்சுவேலியில் தேசிய சேமிப்பு வங்கியின் கிளை ஒன்று திறக்கப்படவுள்ளது. இதற்கென அச்சுவேலி - பருத்தித்துறை பிரதான வீதியில் கட்டடம் ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் - சுன்னாகம் ஆகிய பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குறித்த வங்கியின் வாடிக்கையாளர்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு இந்தக் கிளை நிறுவப்படுவதாகக் கூறப்பட்டது.

இதேவேளை - அச்சுவேலியில் தேசிய சேமிப்பு வங்கியை ஆரம்பிப்பதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

அடுத்த வருட முற்பகுதியில் இருந்து அச்சுவேலியில் வங்கியின் செயற்பாடுகள் ஆரம்பிக்கும் - என்று வங்கியின் பருத்தித்துறை கிளைமுகாமையாளர் எம்.பரமானந்தம் தெரிவித்தார்.

(எ-11)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

தென்மராட்சி,டிசெ.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. அண்மையில் பெய்த அடைமழையினால் இப்பகுதியில் உள்ள பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் நுளம்புகள் பெருகியுள்ளன.

குறிப்பாகக் கிராமப்புறங்களில் இன்னமும் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இது நுளம்புகள்' பெருக வாய்ப்பாகிறது

இதனால் நுளம்புகள் மூலம் பரவும் நோய்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக ஆஸ்பத்திரிகளின் புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவருகிறது.

இப்பிரதேசத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளின் வெளிநோயாளர் பிரிவுகளில் சுமார் 800இற்கும் அதிகமானோர் தினமும் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தினமும் 30இற்கும் அதிகமானோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வார்ட்டுகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளர்களும் சாவகசசேரி ஆஸ்பத்திரி வார்டுக்களில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருவதையும் காணமுடிகிறது.

ஆஸ்பத்திரியில் நடத்தப்படும் இரத்த பரிசோதனையின் போது சிலர் மலேரியா காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# காதலித்துக் கைவிடப்படும் பெண்கள் அதிக எண்ணிக்கையில் முறைப்பாடு!

## அரசியல்துறைப் பணிமனைகளில்

பெண்களைக் காதலித்துவிட்டு திருமணம் புரியமறுத்து ஏமாற்றும் ஆண்கள் குறித்த முறைப்பாடுகள் குடாநாட்டில் உள்ள அரசியல்துறைப் பணிமனைகளில், அதிகரித்துள்ளன.

படிதத பெண்கள் உட்பட வயது வேறுபாடின்றி ஆண்களால ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றும் - அவர்களில் பலரும் அரசியல் துறைப் பணிமனைகளில் முறையிடுகின்றனர் என்றும் - அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதிப்படைந்த பெண்கள் செய்யும் முறைப்பாடுகளை மனிதாபிமான அடிப்படையில் அணுகுவதாகவும் -

பெரும்பாலான முறைப்பாடுகளின் போது, ஆண்களின் பெற்றோர் அல்லது உறவினருடன் கலந்துபேசி சுமுகமான தீர்வு காணப்படுவதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடும சில பெண்கள் கலாசாரத்தைப் பேணுபவர்களால் அடையாளம் காணப்பட்டனர் என்றும் -

இவர்களுக்கு அரசியல்துறையினரால் திருந்தி வாழ அறிவுறுத்தலும், வாய்ப்பும் வழங்கப்பட்டன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

ஆள்நடமாட்டம் அற்ற அல்லது குறைவாக உள்ள இடங்களில் சந்தேகப்படும் படியாக நிற்பவர்கள் குறித்தும், பெண்களுடன் சேஷ்டைபுரிபவர்கள் குறித்தும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

### நாளை

மார்கழி 08
செவ்வாய்க்கிழமை
(23.12.2003)
திதி : அமாவாசை
பின்னிரவு 3.48 வரை.
நட்சத்திரம் : மூலம்
பின்னிரவு 2.23 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம்: 10.55-12.25
ராகுகாலம்: 3.25-4.55
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சிறப்பைத் தேடாதீர்கள். அந்த நேரத்தில் வாய்மையைத் தேடுங்கள். வாய்மையைத் தேடினால் உங்களுக்கு வாய்மையும் சிறப்பும் ஒன்றாகவே கிடைக்கும்.

# கண்ணிவெடி அகற்றும் பணி தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

கிறிஸ்மஸ் விடுமுறையையொட்டி 'ஹலோ ட்ரஸ்ட்' கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் தனது பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

கடந்த 12 ஆம் திகதிமுதல் இடைநிறுத்தப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளை இந்த நிறுவனம் எதிர்வரும் 29ஆம் திகதிமுதல் மீண்டும் தொடரும்.

இந்நிறுவனத்தில் நிர்வாக அதிகாரிகளாகப் பணியாற்றும் வெளிநாட்டவர்கள் கிறிஸ்மஸ் விடுமுறைக்காகத் தமது தாயகம சென்றுள்ளனர். அவர்கள் திரும்பி இங்கு வந்த பின்னர் பணிகள ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஒ-7)

# வித்தியாசமான உடையணிந்தோர் இரவில் வீடுகளில் நடமாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

வடலியடைப்புப் பகுதியிலுள்ள சில வீடுகளுக்கு நள்ளிரவு வேளைகளில் அசாதாரணமான - வழமைக்கு வித்தியாசமான உடையில் செல்லும் சிலர் வீடுகளின் கதவுகளைத் தட்டுவதாகவும் -

வீடுகளின் ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்ப்பதாகவும் - கூறப்படுகின்றது.

அண்மையில் இப்பகுதியிலுள்ள வீடு ஒன்றினுள் நள்ளிரவு வேளை நுழைந்த சிலர் வீட்டுக் கதவைத் தட்டி ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப்பார்த்துள்ளனர். இதனையடுத்து, வீட்டிலுள்ள பெண்கள், குழந்தைகள் கூக்குரலிடவே அசாதாரணமான - வழமைக்கு வித்தியாசமான உடையில் வந்தோர் அங்கிருந்து ஓடித்தப்பிவிட்டனர்.

இதுபோன்ற சம்பவங்கள் இப்பகுதியில் அடிக்கடி நடைபெறுவதாகவும் - இதனால், இரவுவேளைகளில் பொதுமக்கள் மிகுந்த அச்சத்துடன் பொழுதைக் கழிக்கின்றனர் என்றும் - கூறப்பட்டது.





## மீனாவின் மூன்று விருப்பங்கள்

அடுத்த நாள் காலை தன்னுடைய கனவை மீனா நினைக்கிறாள். நிஜ வாழ்க்கையில் அற்புத விளக்கு ஒன்றும் இல்லை என்பதையும் தன்னுடைய கிராமத்தில் உள்ள மக்களை சுகதேகிகளாக மாற்றுவதற்கு தொண்டாற்றவேண்டும் என்றும் அவள் எண்ணுகிறாள்.

ராஜுவினதும் மற்றப்பிள்ளைகளினதும் மிதுவினதும் உதவியுடன் மூன்று செய்திகளை அவள் கிராம மக்களிடையே பரப்புகிறாள். கனவு கண்டபோது அந்த மூன்று விடயங்களையும் அடைவதற்குத்தான் அவள் விரும்பினாள்.

சுகாதாரமான கழிப்பிடங்களை எப்பொழுதும் பயன்படுத்த வேண்டும். பாதுகாப்பான, துப்புரவான நீரைப் பருகுதல் வேண்டும். உண்பதற்கு முன்பும் கழிப்பிடத்தைப் பயன்படுத்திய பின்பும் குழந்தையைச் சுத்தப்படுத்திய பின்பும் உங்கள் கைகளைச் சவர்க்காரம் போட்டுக் கழுவுதல் வேண்டும். அவளின் 'சுத்தம் சுகம் தரும்' இயக்கத்திற்கு கிராம சேவகர் ஆதரவளிக்கிறார் அது பெரு வெற்றி பெறுகிறது. சுகாதாரமான கழிப்பிடங்கள், பாதுகாப்பான துப்புரவான குடிநீர், முறையான கழுவும் பழக்கங்கள் ஆகியவை அக்கிராமத்து மக்களை சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ உதவுகின்றன. (சி-32118)



அனுசரணை:

unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## முதலாம் வருட நினைவஞ்சலி



மண்ணிலே மலர்ந்தது 12 - 08 - 1917

விண்ணிலே கலந்தது 22 - 12 - 2002

### திருமதி அக்கினஸ் சின்னப்பு

(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பன்னிருவரின் பதிவிடமாய் - எம்முடன்
வாழ்ந்திட்ட அன்னையே!
ஓராண்டு ஓடி மறைந்தது - உம்
ஒளி முகங் காணாமல்
நீராண்ட கண்களுடன் நிற்கிறோம் தாயே!
உங்கள் பிரிவைத் தாங்க முடியாமல் தவிக்கின்றோம்.
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*41, வேம்படி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (26096) (26-13-16-25)

## பீடி வாங்குவதில் வாய்த்தர்க்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

பீடி வாங்குவதில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கத்திவெட்டில் முடிவடைந்தது.

ஊர்காவற்றுறை, கரம்பனில் நேற்று முன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் கடைஉரிமையாளரினால் ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை (வயது42) என்பவர் தலையில் வெட்டிப்படுகாயப் படுத்தப்பட்டார் என்று கூறப்படுகின்றது. காயமடைந்த அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-4-5)

## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்மன்றம் நடத்தும் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவின் 'சொல்லினால் ஒரு மாளிகை' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் எஸ்.கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனும், அறிமுகவுரையை கவிஞர் சோ.பத்மநாதனும், ஆய்வுரையை பா.மகாலிங்கசிவமும் நிகழ்த்தவுள்ளனர்.

(ஒ-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யுத்த அனர்த்தங்களினால் அழிவுற்ற சரசாலை தெற்கு J/116 கிராமசேவையாளர் பிரிவில் உள்ள எமது மாதர் சங்க உறுப்பினர்களின் இல்லங்களைப் புனரமைப்பதற்கும், மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கும் முதற்கட்டமாக 1000 சீமெந்துப் பைக்கற்றுக்களைத் தந்துதவிய இந்துகலாசார மாண்புமிகு அமைச்சர்

உயர்திரு.

### தியாகராசா மகேஸ்வரன்

அவர்களையும் சிவா, பற்புஅண்ணா அவர்களையும் பல்லாண்டு காலம் சகல சௌபாக்கியங்களுடன் வாழ மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சரசாலை மாதர்சங்கம்.
**J/316** கிராமசேவையாளர் பிரிவு. (26131) (26-13-16-25)

## கிறிஸ்தவ வாலிபர் சங்கம் - யாழ்ப்பாணம்
## வருடாந்த அங்கத்தவர் ஒன்றுகூடல் 2003

Y M C A

எமது நிறுவனத்தின் வருடாந்த அங்கத்தவர் ஒன்றுகூடலானது இன்று (22.12.2003) திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.Y.M.C.A. மண்டபத்தில் இடம்பெறும்.

சகல அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொதுச் செயலாளர்,
யாழ்.Y.M.C.A.

(26022)(13-16-25)

## காப்புறுதி அலுவலர்கள் தேவை

காப்புறுதித்துறையில் முன்னணி வகிக்கும் கம்பனிக்கு யாழ்ப்பாணத்தில் பிரதேச ரீதியாக காப்புறுதி அலுவலர்கள் தேவை. 26.12.2003 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல. 2127
உதயன்.

(26147) (25-12-16)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

†



*மண்ணில்* 14 - 07 - 1933

*விண்ணில்* 22 - 12 - 2002

### திருமதி மரியம்மா அகஸ்தீன்

அன்போடும் பண்போடும் ஆதரவாக
எமையெல்லாம் வழி நடத்திச் சென்று
ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டுவிட்ட
எம் அன்புத் தெய்வத்தின்
ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைவேண்டி நிற்கிறோம்.

பிரிவால் துயருறும்:
கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

*நாவற்குழி,*
*கைதடி.* (25895) (25-13-16)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் :222 2459

## S.N.T. சேவிஸ் ஸ்ரேசன்

உங்களது மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகளை மிகவும் சிறந்த முறையில் சேவிஸ் செய்து கொள்ள

**S.N.T. சேவிஸ் ஸ்ரேசன்**

யாழ். வீதி, மானிப்பாய்.

*(மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகில்)*

விரைவில் பாரவூர்திகளுக்கான சேவிஸூம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(26104) (35-25-13-16)

## பண்டிகைக்கால அதிரடி SALE

## மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

10,11 POWER HOUSE RD. GRAND BAZAAR, JAFFNA

நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள், சல்வார்கமீஸ் வகைகள், கவுன் வகைகள், சோக்கோ ரவுசர், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், சேட், Tசேட், கோட் சூட், பட்டுச்சேலைகள் என்பனவற்றின் அதிநவீன புதிய டிசைன்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



குறிப்பு:- ரூபா 3000/=இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஆண், பெண் இருபாலாருக்கும் பொருத்தமான அழகிய Tசேட்ஸ் அன்பளிப்பாக வழங்கப்படும். இச்சலுகை 20.12.2003 - 31.12.2003வரை மட்டுமே!

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

இல.10,11, மின்சார நிலைய வீதி, (மலையன்கபே முன்பாக) பெரியகடை, யாழ்ப்பாணம்.

## விஷேச பிரார்த்தனையும் அன்னதானமும்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் ஸ்ரீ.நவரட்ணம்

அவர்கள் 21.11.2003 இல் கனடாவில் சிவபதமடைந்ததையிட்டு அவருடைய 31ஆம் நாள் நினைவு ஆத்ம சாந்திக்காக நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மாரின் குருபூசை மடத்தில் இன்று (22.12.2003) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு விஷேச அன்னதானம் நடைபெறும்.

அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*நல்லூர் தேரடி ,* - நிர்வாகம்.
*நல்லூர்.* (26156) (25-11-16) அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடம்.

## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!

## M.C. Booking Centre





☆ சொகுசான பயணங்களுக்கு (VAN) வான் சேவை.
யாழ். - கொழும்பு, கண்டி, மன்னார், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் சகல இடங்களுக்கும்.
☆ உங்களது தேவைகளுக்கேற்ற குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத சொகுசு வான் சேவைகள்.
☆ விசேட கட்டணச் சலுகையும்,
சிறுவர்களுக்கான இலவச பயணச் சலுகையும்
இத்தனையும் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்:

**N.Satheskumar - Proprietor,**

மலாயன் கபே, 36,38, பெரியகடை வீதி, யாழ்.

☎ 222 2373, 0777 146834 கொழும்பில்: 0112 - 454595.

(26137)(34-13-16-25)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09 - 08 - 1943

ஆண்டவன் அடியில் 22 - 12 - 1999

### திருமதி நாகராஜா இமல்டா அல்லீனம்மா

(லக்கினி)

ஆண்டுகள் நான்கு மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் மட்டும் மறையவே மறையாது!
இங்கு தினமும் உங்களை நினைந்தே
கவலையுடன் கலங்கித் தவிக்கின்றோம்.
ஓம் சாந்தி!

பிரிவால் வாடும்:
கணவர், கௌரி (மகள்).

*பொன்னாலை வீதி,*
*மானிப்பாய்.* (26117) (24-11-16-25)

ஊர்காவற்றுறை - காரைநகர் இடையிலான

# பாதைப் படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

காரைநகர்,டிசெ.22

இடைநிறுத்தப்பட்டுள்ள காரைநகர் - ஊர்காவற்றுறை இடையிலான பாதைப் படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுவிடயமாக பொதுமக்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபரிடம கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காரைநகர் துறைமுகத்திற்கும், ஊர்காவற்றுறைக்கும் இடையில் கடற்படையினரால் நடத்தப்பட்டு வந்த பாதைப் படகுச்சேவையை கடந்த 2 ஆம் திகதிமுதல் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்றிருந்தது. இரண்டு நாள்கள் நடைபெற்ற பாதைப் படகுச்சேவை இயந்திரம் பழுது என்று கூறி சேவை ஆரம்பமான மூன்றாம் நாளே நிறுத்தப்பட்டுவிட்டது.

இதனால், காரைநகரிலிருந்தும் மூளாய், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இருந்தும் ஊர்காவற்றுறையில் உள்ள அரச திணைக்களங்களான பிரதேச சபை, நீதிமன்றம், வைத்தியசாலை, வங்கி, பொலீஸ் நிலையம், கோட்டக்கல்வி அலுவலகம், பாடசாலைகள் பல நோ.கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் கடமையாற்றும் ஊழியர்களும் -

ஊர்காவற்றுறை ஊடாக நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலுக்குச செல்லும் யாத்திரிகர்களும், ஊர்காவற்றுறையில் இருந்து காரைநகரில் கடமைபுரியும் ஊழியர்களும் - போக்குவரத்தில் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன், இவ்வாறு பயணம் செய்யும் அனைவரும் யாழ்ப்பாணம் சென்று பின்னர் அங்கிருந்தே தமது பயணத்தைத் தொடரவேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே, எமது மக்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு பாதைப் படகுச்சேவை சீராகும் வரை கடற்படையினரின் சிறுபடகினையோ அல்லது ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குச் சொந்தமான படகினையோ இந்தச் சேவையில் ஈடுபடுத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்று அந்த மகஜரில் உள்ளது. (எ-73)

# தலைமன்னார் படைமுகாமை அகற்றும்படி கோரிக்கை

கிளிநொச்சி,டிசெ.22

மன்னாரில் தலைமன்னார் துறைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் மன்னார் அரச அதிபரிடம் கோரியுள்ளனர். இதுதொடர்பாக அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பாரிய இராணுவமுகாம்களில் தலைமன்னார் முகாமும் ஒன்றாகும்.

இப்பகுதி மக்கள் கடற்றொழில் மற்றும் பனைவளத்தையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். படையினர் அப்பகுதியில் முகாமிட்டுள்ளதால் கடல் மற்றும் பனை வளங்களைப் பொதுமக்களால் முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் உள்ளது.

ஆகவே, இப்பகுதி மக்கள் தமது பொருளாதாரத் தரத்தை மேம்படுத்த தடையாகவுள்ள இராணுவ முகாம்களை அகற்ற ஆவண செய்யவேண்டும் - இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசெப் ஆண்டகை, மன்னார் மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் தமிழத் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் இம் மகஜரின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஒ-5)



வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையின் புனரமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரசவ விடுதியை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் பிரதிநிதி நில்றைற் திறந்துவைத்தார். களஞ்சிய அறையை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் கே.ரி.சிவபாதம் ஆகியோர் உட்பட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். *(படங்கள்: வடமராட்சி செய்தியாளர்)*

பொலீஸ் திணைக்களத்துக்கான

# மோட்டார் சைக்கிள் கொள்வனவு நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது

கொழும்பு,டிசெ.22

பொலீஸ் திணைக்களத்திற்கு மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் தலையீட்டின் பேரிலேயே இந்தக் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பொலீஸ் திணைக்களத்தின் தேவைக்கென ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்வதறகு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், வழமையான கேள்விப் பத்திர நடைமுறை இக்கொள்வனவில் பின்பற்றப்படவில்லை என்றும் -

இதனாலேயே ஜனாதிபதி இதில் தலையிட்டு கொள்வனவை இடைநிறுத்தியுள்ளார் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலுள்ள 'எம்பீல்ட்' நிறுவனத்திடம் இருந்து மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் மூவர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் உள்துறை அமைச்சின் பொறுப்பு இருந்தபோது இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இநதக் கொள்வனவு நடவடிக்கையில் தரகுப்பணம் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் சில பொலீஸ் அதிகாரிகள் ஈடுபட்டனர் என்றும் -

இதற்காக அவர்கள் இந்தியாவுக்குச் சென்று மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனத்துடன் நடத்தியுள்ளார்கள் என்றும் -

பொலீஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி உள்துறை அமைச்சைப் பொறுப்பேற்றதும் இக்கொள்வனவு நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளார். இதனுடன் தொடர்புடைய பல உத்தியோகத்தர்களிடமிருந்து விளக்கம் கோரப்பட்டுள்ளது. இதுகுறித்த விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-5)

### 16 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரம்

தென்மராட்சி,டிசெ.22

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்தில் இதுவரை காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத 16 குடும்பங்களுக்கு இன்று திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனால் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்குடியேற்றத்திட்டத்தில் 197 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டதாகவும், இதுவரை 181 குடும்பங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# காணி உரிமைச் சட்டம் விரைவில் திருத்தப்படும்

அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.22

காணி உரிமைச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வரத் தீர்மானித்திருப்பதாகக் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சொந்தக் காணிகள் இல்லாத சுமார் 17 லட்சம் குடும்பங்களுக்கு காணிகளைச் சொந்தமாகப் பெற்றுக கொடுப்பதே இதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காணி உரிமைச் சட்டமூலத்தில் அரச காணிகளைப் பங்கீடு செய்வது குறித்த விதந்துரை அரசியல் சாசனத்துக்கு முரணானது என தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது தற்போது பயனளிக்கும் ஒன்றாகும். இதனைக் கருதியே புதிய சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவ்வாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஒ-4-5)

# மகளிர் அமைப்புகள் இணைந்து செயற்படுவது அவசியமாகும்

### புலிகளின் பெண் பிரமுகர் வலியுறுத்து

கிளிநொச்சி.டிசெ.22


மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் மகளிர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் பெண்கள் தொடர்பான பல மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரேமினி.

மட்டக்களப்பில் பல பெண்கள் அமைப்புக்கள் தமது தேவைகளுக்கு ஏற்றவாறு சில திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. இந்த மாவட்ட பெண்களின் தேவைகளை இனம் கண்டு அவர்களுக்கு ஏற்றவாறு ஆரோக்கியமான திட்டங்களை முன்னெடுப்பதற்கு இவ்வாறான பெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும் என்றும் - பிரேமினி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - பெண்கள் மீதான வன்முறை எதிர்ப்பு வாரம் கடந்த 15 ஆம்திகதிமுதல் மட்டக்களப்பில கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாவட்டத்திலுள்ள 11 அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்த வன்முறை எதிர்ப்பு வாரத்தை அனுஷ்டித்து வருகின்றன.



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் இடம்பெற்ற இறைநாம பக்தி கீதங்கள் ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் சிவஸ்ரீ இளையதம்பி சபாரத்தினசிவசர்மாவிடம் இருந்து தொழிலதிபர் ச.சிவகுமாரன் ஒலிப்பேழையைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். (ஒ-185)

# விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு பொருத்தமற்றோர் நியமனம்

ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணி எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. இப்பணிக்கென தெரிவு செய்யப்பட்டுள்ள பரீட்சகர் குழுவில் பொருத்தமில்லாதவர்களும், குறிப்பிட்ட பாடத்தை உரிய வகுப்புகளில் கற்பிக்காதவர்களும் இடம்பெற்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே மதிப்பீட்டுப் பணிகளுக்கென தெரிவுசெய்யப்பட்ட பரீட்சகர்களே பெரும்பாலும் பலவருடங்களாக இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், அவர்களில் பலர் அவர்கள் மதிப்பிடவுள்ள பாடத்தைத் தற்சமயம் உரிய வகுப்புகளில் கற்பிப்பதில்லை என்று அறியமுடிகிறது. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அந்தப் பாடத்துக்கான மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ.சாதாரணதர வகுப்பில் பாடங்களைக் கற்பிக்காத ஆசிரியர்கள் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதால் பரீட்சை எழுதிய மாணவர்கள் பலன் பாதிப்படைய நேரிடும் என்று பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பரீட்சகர்களைத் தெரிவுசெய்வதற்காக அனுப்பப்படும் விண்ணப்பங்களை சில பாடசாலை அதிபர்கள் சரியான முறையில் பரீட்சித்து சிபார்சு செய்வதில்லை. இதனாலேயே இத்தகைய நிலை ஏற்படுகிறது. கடந்த ஆண்டு மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்ட ஆசிரியர் ஒருவர் இம்முறையும் பணியில் ஈடுபடுவதற்கு வசதியான முறையில் சிலபாடசாலை அதிபர்கள் சிபார்சுகளை மேற்கொள்வதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரு சமயத்தைச் சேர்ந்த ஆசிரியர் வேறொரு சமயத்துக்குரிய விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த ஆரம்பப் பயிற்சி ஆசிரியர் ஒருவர் தனது சமயம் அல்லாத வேறொரு பாட மதிப்பீட்டு பணிக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பப் பயிற்சி ஆசிரியர்களும், பாடசாலையில் கற்பித்தல் செயற்பாட்டில் பங்கேற்காத ஆசிரிய ஆலோசகர்கள் பலரும் மதிப்பீட்டுப் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளார்கள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பமாக முன்னர் இக்குறைபாடுகளைச் சீர் செய்ய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படவேண்டும் என பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்.




### நிறைமுனைவன்

மதிப்பீட்டுக்குழுத் தலைவர்கள் மூலம் பரீட்சகர்களிடம் இருந்து திருப்திகரமான சிபார்சையும் உறுதிப் படுத்தப்பட்ட நேரகுசியையும் புதிதாகப் பெற்றுக்கொண்டு மதிப்பீட்டுப் பணியில் பொருத்தமில்லாத பரீட்சகர்களை விடுவித்து புதியவர்களை இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

# பண்டிகைக் கால மாபெரும் மலிவு விற்பனை


உங்கள் உள்ளத்தைக்
கொள்ளைகொண்ட நவீன
டிசைன்களிலான Bata
பாதணிகளை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள:
சந்தியா
காலணியகம்
பிரதான வீதி,
பண்டத்தரிப்பு
531, பருத்தித்துறை வீதி,
நல்லூர். T.P: 6960
(C/32168)

நீடித்த பாவனை
நவீன வடிவமைப்பு
தரத்தில் சிறந்தது
இவற்றை உங்களுக்குப்
பொருத்தமான விலையில்
வழங்குவது
Bata
அபிராமி
சூ பலஸ்
இல. 156, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P.:2223525
(C/32172)

அனைவரினதும்
இதயங் கவர்ந்த தரமான
பாதணிகளை
உங்களுக்குத் தருவது
Bata
EXXCAPE
SHOE PALACE
K.K.S. Road, Kondavil.
(C/32169)

உங்கள் பாதங்களுக்கேற்ற
அழகிய Bata பாதணிகளை
நீங்கள் விரும்பிய
வடிவங்களில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்:
இராமாச்சி
அழகுமாடம்
பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு,யாழ்ப்பாணம். TP: 0777 -110315
(C/32167)


சிறியோர் முதல்
பெரியோர் வரை
அனைவரும் விரும்பி
அணியும் ஒரே பாதணி
Bata
பேன் நியூ
பசன் ஹவுஸ்
பிரதான வீதி, சங்கானை.
(C/32166)

உங்கள் உள்ளத்தைக்
கொள்ளைகொண்ட
நவீன டிசைன்களிலான
Bata பாதணிகளை
ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள:
யாழ் பாட்டா
இல.11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. : 2223152
(C/32171)

உங்கள் மிருதுவான பாதங்களுக்கேற்ற
இலகுவான பாதணிகளை விரும்பிய அளவுகளில்,
விரும்பிய டிசைன்களில் பெற்றுக்கொள்ள
Bata குகன் காலணியகம்
யாழ். A-9 சாலை 1-9 தங்ககம் அருகில், கிளிநொச்சி.
(C/32173)

நீடித்த பாவனை
நவீன வடிவமைப்பு
தரத்தில் சிறந்தது
இவற்றை உங்களுக்குப் பொருத்தமான விலையில் வழங்குவது
Bata
நாகம்ஸ் பாட்டா
இல. 10, நவீன சந்தை,
சுன்னாகம்.
ரட்ணம் பாட்டா
இல. 49, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/32120)

# திருமணம் புரிபவர்களுக்குத் திருவள்ளுவர் அறிவுரை




புலவர்
ம.பார்வதிநாதசிவம்

தலைவன் தலைவியரிடை ஏற்படும் இலட்சிய வாழ்வைத் திருவள்ளுவர் காமத்துப் பாலிலும் அறத்துப்பாலில் இல்லற இயலிலும் கூறுகிறார். காமத்துப்பாலில் அழகுதான் இருவரிடமும் கவர்ச்சியை ஏற்படுத்துகிறது என்கிறார். அறத்துப்பாலில் அன்புதான் அந்தக்கவர்ச்சியை நிலைநிறுத்தி நிரந்தர வாழ்வுக்கு வழி செய்கிறது என்கிறார்.

வானில் பறக்கும் விமானம் வானில் பறக்க உயர எழுவதற்குச் சிறிது நேரம் தரையில் ஓடவேண்டி இருக்கிறது. தரையில் ஓடுவதற்குச் சில்லுத் தேவை. ஆனால் வானில் உயர எழுந்ததும் சில்லின் தேவை இல்லாமற் போய் விடுகிறது.

அதுபோலத்தான் தலைவன் தலைவி இணைவதற்கு அழகு தேவைப்படுகிறது. அவர்கள் இணைந்த பின்னர் அன்பு என்ற வானில் பறக்கும்போது அழகு என்ற சில்லு தேவையற்றதாகி விடுகிறது.

அழகுக்கு வலிமை இருந்தால் முதுமை வந்து அழகு நீங்கும் போது கணவனும் மனைவியும் பிரிய நேர்ந்து விடுமே! அதனால் தலைவன் தலைவியை நிரந்தரமாக வாழச்செய்வது அன்புதான்.

காமத்துப்பாலின் முதற் குறளிலேயே திருவள்ளுவர் தலைவியின் அழகைச் சொல்கிறார்.

"அணங்குகொல் ஆய்மயில்கொல்லோ கனங்குழை
மாதர் கொல்மாலு மென்நெஞ்சு"

என்பது குறள்

தலைவியைக் கண்ட தலைவன் இவள் தேவமகளோ! புதுமையாகப் படைக்கப்பெற்ற மயிலோ! மனிதப் பெண்தானோ! என்று ஐயப்படுகிறான். இந்த ஐயம் தலைவியின் அழகினால் தலைவனுக்கு ஏற்பட்டது.

தலைவனும் தலைவியும் திருமணம் புரிந்து இல்லறம் நடத்துகிறார்கள். அந்த நேரத்தில் இல்லற வாழ்வில் மிகுந்து காணப்படுவது அன்பே!

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கைப் பண்பும் பயனும் அது"

என்கிறார் திருவள்ளுவர்.

இல்லறத்தின் உயிர்நாடியாகிய அன்புதான் இல்வாழ்வின் பண்பு என்கிறார்.

இந்த அன்பு கணவன் மனைவியிடை ஏற்பட்டுப் பிள்ளைகளிடம் பரந்து உறவினர்களிடம் வளர்ந்து விருந்தினரிடம் சிறந்து வற்றாத ஆறாக ஓடிச்சென்று தெய்வம் என்ற கடலுடன் கலக்கிறது. இது திருமணம் புரிபவர்களுக்குத் திருவள்ளுவர் காட்டும் இலட்சியம். திருவள்ளுவர் கூறும் அறிவுரை.

ஆனால் இந்த அவசர காலத்தில் பெரும்பாலான திருமணங்கள் அன்பைப் பற்றிக் கவலைப்படாமலே நடைபெறுகின்றன.

பெரும் தொகை சீதனம் என்பதற்காகத் திருமணங்கள் நடைபெறுகின்றன. மணமகன் பெரும் தொகை வருமானம் உள்ளவன் என்பதற்காகத் திருமணங்கள் நடைபெறுகின்றன. குடும்ப அந்தஸ்துக்கும் திருமணங்கள் நடைபெறுகின்றன.

அன்பில்லாமலே தொடங்கும் திருமணங்கள் சில விவாகரத்தில் முடிகின்றன. சில ஒரே வீட்டிலேயே கீரியும் பாம்புமாக வாழ்கின்றன. அன்பில்லாதார் சிலர் அன்பில்லாமலேயே வாழ்ந்து அன்பில்லாமலேயே காலத்தைப் போக்கியும் விடுகின்றனர். அன்பில்லாத இல்லறத்தை விடப் பிரம்மசரியம் மேல் அல்லவா?

கணவனும், மனைவியும் அன்புடன் வாழும் குடும்பங்களில் தியாகத்தைக் காண முடியும். குடும்பத்தின் முன்னேற்றத்துக்காகக் கணவன் தனது உணவு, உறக்கத்தைத் தியாகம் செய்து அலுவலகத்தில் ஓய்வில்லாது பணிபுரிகிறான்.

திருவள்ளுவர் கூறும் அன்பு மனைவியின் தியாகங்கள் எப்படி இருக்கும் என்பதைக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள்

"ஊக்கம் உடைந்தரும் ஏழைகளைக் - காணில்
உள்ளம் உருகித் துடிப்பவர் ஆர்?
காக்கவே நோயாளி அண்டையிலே - இரு
கண்ணிமை கொட்டாதிருப்பவர் ஆர"
"சிந்திய கண்ணீர் துடைப்பவர் ஆர் -பயம்
சிந்தை அகன்றிடச் செய்பவர் ஆர்
முந்து கவலை பறந்திடவே - ஒரு
முத்தம் அளிக்க வருபவர் ஆர"

என்று கேட்கிறார்.

அல்லும் பகலும் குடும்ப முன்னேற்றத்துக்காகக் கணவன் தியாகம் செய்வதற்கும் மனைவி பிள்ளைகள் சுதந்திரத்திற்காகவும் கணவனின் நலத்திற்காகவும் தியாகம் செய்வதற்கும் அன்பே காரணமாக அமைகிறது.

அன்புள்ள தலைவனும் தலைவியும் தமக்குள் ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்கின்றனர். இருவரும் இணைந்து பிள்ளைகளுக்காகத் தியாகம் செய்கிறார்கள். இவர்களது அன்பு முதுமையிலும் தொடர்கிறது. வீடுபேற்றுக்கு வழியும் ஆகிறது. இதனைத் தொல்காப்பியர்

"காமஞ்சான்றகடைக்கோட் காலை
ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரிஅற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் பிறந்ததன் பயனே"

என்கிறார்.

அன்பமைந்த தலைவனும் தலைவியும் இன்பம் நுகர்ந்து முடிந்த முதுமைக் காலத்திலும் உள்ளம் ஒன்றுபட்டவராய் மக்கட் செல்வத்துடனும் உறவினருடனும் வாழ்ந்து கொண்டு பேரின்பத்தை அடையும் வழியிற் பழகுவார்களாம். அதுவே பிறந்ததன் பயனாம்.

முற்றும்

---

# ஆன் ரணசிங்க-
## அரை நூற்றாண்டு இலக்கியப் பங்களிப்பு

'நாற்பதாண்டுகளின் பின்
மீண்டுமொருமுறை தீயின்
தாண்டவம்
இரவுவானில் இரத்தப்பெருக்கு,
வன்முறை கொடுமைகள்...'

'ஜூலை 1983' என்ற கவிதையிலிருந்து சில வரிகள் இவை. இதை எழுதியவர் தமிழரல்லர்; யூதர், சிங்களப் பேராசிரியர் ஒருவரின மனைவி, உலகறிந்த கவிஞர் திருமதி ஆன் ரணசிங்க அவர்கள். 'நாற்பதாண்டுகளின் பின்' என்ற முதல் அடி அர்த்தச்செறிவு மிக்கது. 1930களின் பிற்பகுதியிலும் 40களின் முற்பகுதியிலும் இடம்பெற்ற, ஹிட்லரின் யூத இன ஒழிப்பு வன்முறையின் தொடர்ச்சியாகவே 83 ஜூலை கவிஞர் மனதில் படுகிறது. ஹிட்லரின் அந்த ஈவிரக்கமற்ற வன்கொடுமைகளால் நேரடியாக மிகவும் பாதிக்கப்பட்டவர் அவர் அந்த இன ஒழிப்புக்குத் தப்பி பெற்றோரைப் பிரிந்து, தமது 13ஆவது வயதில் அகதியாகி இங்கிலாந்து போய்ச் சேர்ந்தவர். தாம் தப்ப முடியாவிட்டாலும் மகளாவது தப்பட்டும் என்றனுப்பிய அப்பெற்றோர் பின்னர் போலந்தில் ஹிட்லரின் வதை முகாமொன்றில் கொல்லப்பட்டார்கள். இங்கிலாந்து வந்த ஆன் படித்து தாதியர் பயிற்சி முடித்துப் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் மேற்படிப்பிற்காகச் சென்றிருந்த வைத்தியர் ரணசிங்க அவர்களை மணமுடித்து, ஐம்பதுகளின் நடுப்பகுதியில் இங்கு வந்து இலங்கைப் பிரஜையானார். அவரது எழுத்தும் இலக்கிய வாழ்வும் ஏறத்தாழ அப்போதே தொடங்கின.

இந்த அரை நூற்றாண்டு காலத்தில் திருமதி ரணசிங்க இலங்கையின் தலைசிறந்த ஆங்கிலக் கவிஞராக மட்டுமன்றி, உலகு நன்கறிந்த ஒரு கவிஞருமானார். அவரது கவிதைகள், சிங்களம், தமிழ் மட்டுமன்றி ஜெர்மன், பிரெஞ்சு, டச், ஹீப்ரு, ஸ்வீடிஷ் மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. 1971இல் வெளியான அவரது 'உலகை உறிஞ்சி வரட்டும் சூரியன' என்பதிலிருந்து, 'சொற்களால் எமது வாழ்வை எழுதுகிறோம்', கருணை வேண்டுதல்', 'நிழல்கள் கூட அன்று' போன்ற ஏறத்தாழ 10 கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. இவற்றைவிட, 'அவா' கடிதமும் ஏனைய கதைகளும் என்ற இரு சிறுகதைத் தொகுதிகளும் அவரது ஆக்கத் திறமைக்குச் சான்று பகர்வன.

இலங்கை வந்தபின் தமது இளமைக்கால ஜெர்மன் அனுபவங்களை இரைமீட்டு ஆறுயாதகாலம் தொடராக 'வீரகேசரி' வார வெளியீட்டில்' எழுதினார். அந்த நினைவுகள் இழக்க நேர்ந்த தம் உறவுகளைத் தேடும தாபத்தைத் தூண்டவும் காரணமாயின. ஆன் ரணசிங்கவின் கவிதையில அவரது அந்த அழிக்க வொணா வடுக்கள் இடம்பெறுவதென்பது மிகமிக இயல்பானதே. 'துவம்சம்-1944', 'கொழும்பிலிருந்து ஓஷ்விற்ஸ்' போன்ற பல கவிதைகள் மெய்சிலிர்க்க வைப்பன. அவருடைய கவிதைகளில் அழிப்பும் கொடுமையும் மட்டுமே பாடுபொருள்களல்ல. ஆனால் அவை அவர் மனதில் விளைந்த தாக்கங்களின் அதிர்வுகள் எதிரொலிப்பதை அவரது அநேகமான ஆக்கங்களில் எம்மால் உணரமுடியும். அவருடைய படைப்புக்கள், நாஸிக்கொடுமைகள் பற்றியவை, அக்கொடுமைகள் விளைத்த பாதிப்பின் எதிரொலியாய்க் கிளம்பும் கவிஞரின் உணர்வுகள் பற்றியவை. இலங்கை வாழ்வினடியாகப பிறந்தவை - என மூன்று வகைகளாகப் பிரிக்க முடியுமென விமர்சகர்கள் கூறுவர்.

எப்படியிருப்பினும், உத்திகள், உருவங்கள் - என்று எந்த வித்தியிலும் வாசகர்களை மிரட்ட முனையாத, எளிமையும் நேரடித் தன்மையும் கொண்டவை அவர் கவிதைகள். இப் பண்புடன், அர்த்தச்செறிவு, அனுபவ மெய்மை, சமூக உணர்வு, உணர்ச்சி வெளிப்பாடு, லயம் போன்றவையும் இணைந்து அவர் கவிதைகளை மிளிரச் செய்கின்றன. ஆங்கிலத்தில் மட்டுமன்றி ஜெர்மன் மொழியிலும் அவ்வப்போது எழுதும் ஆன்




ரணசிங்க, ஜெர்மனியிலிருந்து மொழி மாற்றங்களும் செய்துள்ளார். இலக்கியம் படைப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் தீவிர சமூக செயற்பாட்டாளராக அமைந்த பெருமையும் அவருக்குண்டு. சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிரிவில் பதினைந்தாண்டுகள் பணிபுரிந்தவர்.

இலங்கை, ஆங்கில எழுத்தாளர் கூட்டுறவு அமைப்பினதும், அதன் வெளியீடான 'வாய்க்கால்'- இனதும் உயிர் நாடியாக அமைந்தவர். உலகப் புகழ்பெற்ற கவிஞர் என்றோ, விருதுகள் பல பெற்றவர் என்றோ பெருமை பாராட்டாத எளிமை மிக்கவர். ஆனால் எழுத்தாளர்களின் காப்புரிமை மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் போன்றவற்றில் கண்டிப்பும் கறாரும் மிக்கவர்.

ஆன் ரணசிங்க அவர்களின் அரை நூற்றாண்டு இலக்கியப் பங்களிப்பைக் கௌரவிக்குமுகமாக அவரது இலக்கிய நண்பர்கள் மற்றும் அபிமானிகள், வாசகர்கள் இம்மாதம் 19ஆம் திகதி மாலை கொழும்பில் பாராட்டு விழாவொன்றினை நடத்தினார்கள். 'நான் மென்மை பற்றிப் பேச வேண்டும். ஆன் ரணசிங்கவிற்காக '50 எழுத்தாளர்கள்' என்ற தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியர் தற்போது, இலங்கையில் பணிபுரியும் பிரெஞ்சு நாட்டுக்காரரான இலக்கியவாதி திரு.ஜெரார்ட் றொபுசோன்.

-சரந்தன்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உடுவில் கிழக்கைச் சேர்ந்த

**திரு.அ.ஸ்ரீதரன்**

(இளைப்பாறிய உதவிப் பொறியியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை)

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 01.12.2003 அன்று திருகோணமலை நீதிவான் திரு.எஸ்.தியாகேந்திரன் அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

**சத்தியமூர்த்தி தயாளினி குடும்பத்தினர்,**
**விஜியராஜா நளாயினி குடும்பத்தினர் (சுவிஸ்).**

(26044)(35-24-13-16)

# 60ஆவது அகவை நிறைவு நாளும் 5ஆவது மாத நினைவு அஞ்சலியும்

தோற்றம் 1943 12 22



மறைவு 2003 07 31

## அமரர் சீவரத்தினம் கனகசிங்கம்

*(ஓய்வுபெற்ற சிறுவர் நன்னடத்தைப் பாதுகாவல் அதிகாரி)*

கல்வி தந்து பொன்பொருள் தந்து அவையத்து
முந்தியிருக்கச் செய்த நீங்கள்
இவன் தந்தை எந்நோற்றான் கொல் எனும்
சொல் கேட்க இவ்வுலகில் இல்லையே?
ஆயிரம் உறவு இருந்தென்ன "அப்பா" என்றழைக்க
நீங்கள் இல்லையே? என் செய்வோம்!

*"அன்னை இல்லம்",*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*

ஏங்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

(26082) (26-24-13-16)




PC HOUSE (PVT) LTD
Innovative Solutions !
01K, STANLEY ROAD, JAFFNA.
Telephone: 021 2226671 Fax: 021 2226672
Web Site: www.pchouse.lk Email: jaffna @ pchouse.lk

ஈழமணித்திருநாட்டு மக்களுக்கு
எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு
அதிவிசேட விலைக்கழிவில்
Pentium IV கணனிகளும், கணனி உதிரிப்பாகங்களும்

54,500 ரூபாவிற்கு

இலவசம்
600VA UPS
FREE

Pentium IV கணனிகள்
3வருட உத்தரவாதத்துடன்
(இன்று 22.12.2003 முதல் 14.01.2004
வரை மட்டும்).


சகலவிதமான Capture Cards / TDK CDS/ SKC Cassetts
Printers / Scanners / Web Cameras
ஆகியவை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு:- M.SHUKOOR (0777 555855) S.JOYKKUMAR (0777 252066)

(26113) (26-24-13-16)


# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு | 6 ஆம் மாதம் | 19 ஆம் ஆண்டு



அமரர்

## தம்பு அமிர்தலிங்கம்

பூவுலகில் 24-08-1923 விண்ணுலகில் 12-12-2002

எமது குல முதல்வனே ஐயா!
அல்லும் பகலும் ஓய்வின்றி உழைத்து
எம்மை ஆளாக்கி வளர்த்த தெய்வமே!
இப்போது நிரந்தரமாய் ஓய்வுவேண்டிச் சென்றதேனோ?
உங்கள் திருமுகம் காண ஏங்குகின்றோம் ஐயா!
எத்தனை பிறவி எடுத்தாலும் நீங்காது உங்கள் முகம்
உங்கள் வரவுக்காய் சொர்க்க வாசல் திறந்திருக்கும்.




திருமதி

## அமிர்தலிங்கம் யோகம்மா

பூவுலகில் 26-02-1921 விண்ணுலகில் 03-06-2003

அன்பின் வடிவமே! எம் தாயே!
பத்துத் திங்கள் எம்மை சுமந்து பெற்றாயம்மா
குறையெதுவுமின்றி எம்மைக் காத்து
வளர்த்தீர்கள்!
எம்மைவிட்டுச் செல்ல எவ்வாறம்மா
மனம் வைத்தீர்கள்?
எப்போதம்மா நாம் உங்களைக் காண்பது
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகின்றோம்...



அமரர்

## T.A.செல்வக்குமாரன்

(முன்னாள் ஆங்கில ஆசிரியர், மன்னார் நறுவிலிக்குளம், றோ.க.பா.)

அன்னையின் மடியில் 09-12-1959 அரக்கரின் பிடியில் 22-12-1984

அன்புச் செல்வமே! செல்வக்குமாரா!
ஆண்டுகள் 19 சென்றதையா!
உம்மைப் போல் நல்லார் இங்கில்லையென
இறைவனும் உம்மைத் தனக்குத் துணையாக
அழைத்துச் சென்றானோ?
ஏங்குதையா எம் நெஞ்சம்!
உன் மலர்ந்த முகத்தைக் காண்பதற்காய்
ஆண்டவனை நோகின்றோம்?

தற்போதைய முகவரி:
T.A.இராசகுமாரன்,
வி.எம். றோட்,
பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

நிரந்தர முகவரி:
T.A.இராசகுமாரன்,
வடக்குத் தெரு,
தொண்டமானாறு.

உன் பிரிவால் வாடும்:
அக்காமார், அத்தான்மார், அண்ணன்மார், அண்ணிமார்,
தங்கை, தம்பிமார்,
மருமக்கள், சசிகலா, சர்மிளா, செல்வக்குமார், செந்தூரன்.
பெறாமகன் - ஜெயந்திரன். பேரன் - கனா.

(26032) (24-13-16)

# மனித இருப்பைப் பேணும் வகையில் கல்விக் கொள்கை அமையவேண்டும்

மனித வரலாறு நீண்டது. மனிதர்கள் அனைவரும் வரலாற்றை ஒரே பார்வையில் அணுகுவதில்லை. மேலை நாட்டார் வரலாற்றை முன்னோக்கிச் செல்லும் (Linear Process) ஒரு செயற்பாடாக நோக்குகின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் மனிதன் நிகழ்காலச் செயற்பாடுகளில் மாத்திரம் செல்வாக்குச் செலுத்தக்கூடியவனாக இருக்கின்றான். இறந்தகாலமும், எதிர்காலமும் மனிதனுடைய பிடிக்குள் இல்லை. கீழைத் தேசத்தவர் குறிப்பாக இந்து, சித்தாந்த வரலாற்றை மீண்டும் மீண்டும் நிகழும் (Cyclic) ஒன்றாகக் கணிக்கின்றனர். காலநிலை மாற்றமடைவது போன்று இம்மாற்றம் நிகழுகின்றது. இந்தச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் மனிதன் அனைத்துக் காலத்திலும் செல்வாக்குச் செலுத்தக் கூடியவனாக காணப்படுகிறான்.




ஆனால், இன்று உலகில் பெரும்பான்மையான நாடுகள் மேற்கத்தைய முறையையே கையாளுகின்றன. இதற்குப் பல்வேறு அரசியல், காலனித்துவக் காரணிகள் அடிப்படையாக அமையலாம். இதற்கமைய மனித வரலாறானது பின்வருமாறு பகுக்கப்படுகிறது. புராதன காலம், மத்திய காலம், நவீன காலம், பின் நவீன காலம் என்பனவே அவையாகும். இந்த நான்கு காலப்பகுதியிலும் மனிதனின் வரலாற்று ஓட்டம், சிந்தனை வளர்ச்சி, செயற்பாடுகள் மாறுபட்டவையாக இருக்கின்றன. சிந்தனையில், கண்டுபிடிப்புக்களில், அபிவிருத்தியில் வளர்ச்சி இருப்பதை நாம் அவதானிக்கலாம். இவ்வளர்ச்சிகள் மனிதனுக்குப் பயனுள்ளவையா அல்லது பயனற்றவையா என்பது விவாதத்திற்கு உரியது ஆகும். ஆனால், வளர்ச்சி அல்லது மாற்றம் இருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

மனிதன் பற்றிய சிந்தனைகள் மேற்கூறிய நான்கு காலங்களிலும், மாறுபட்ட கருத்துக்களில் விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. புராதன காலத்தில் மனிதனின் இருப்பிற்கும், விலங்குகளின் இருப்பிற்கும் இடையில் நெருக்கமான தொடர்பு உண்டு என்பதை மையப்படுத்திச் சிந்தித்தார்கள். மத்திய காலத்தில் மனிதன், தன்னை விட உயர்வான ஒரு சக்தி இருப்பதில் ஆழமடைந்து, அச்சக்தியைப் பற்றி மென்மேலும் அறிய முற்படுகிறான். அத்துடன் மனித இருப்பின்பால் தொடர்புடைய சில அடிப்படையான ஐயப்பாடுகளிற்கு (உதாரணமாக:- இறப்பு, துன்பம், வாழ்வின் எதிர்காலம்) தனக்கு மேற்பட்ட சக்தியை அடிப்படையாக வைத்து விடைகாண முயல்கிறான். நவீன காலத்தில் இன்னுமோர் படி உயர்வாகச் சென்று மனிதனை மையப்படுத்தி சிந்திக்கத் தலைப்பட்டான். டெக்காட் போன்ற மெய்யியல்வாதிகள் 'நான் சிந்திக்கிறேன். எனவே நான் இருக்கிறேன்' (Logito ergosum) என்ற கருத்தை முன்வைத்து மனித இருப்பை நியாயப்படுத்தினார்கள். இக்காலகட்டத்தில் அதிகமான இறைமறுப்புக் கொள்கைகளும், மத எதிர்கொள்கைகளும் வெளியானது யாம் அறிந்த ஒன்றே.

### பின் நவீனத்துவம்

பின் நவீனத்துவம் என்ற பதத்தை 19ஆம் நூற்றாண்டுகளின் பிற்பகுதிகளில் பலரும் பாவிக்கத் தொடங்கி விட்டனர். பின் நவீனத்துவம் என்ற கருத்தானது பரந்த விடயப்பரப்பை உள்ளடக்கிய ஒரு கருதுகோளாகும். மக்கள் தம்மையும், தம்மைச் சூழவுள்ள உலகினதும் உள்ளர்த்தங்களையும் அடிப்படைகளையும் அறிந்து கொள்ளும் முயற்சியிலிருந்து விடுபட்டு அனைத்தையும், கேள்விக்குறியாக்கி ஐயப்பாட்டில் மேலோங்கி நிற்பது பின் நவீனத்துவம் ஆகும். இது பன்மைத்துவத்தைப் போற்றி ஒருமைப்பாட்டையும், முழுமையான தன்மையையும் ஒதுக்குகிறது. மரபுசார் கொள்கைகளையும், அதன் பின்னணிகளையும் ஒதுக்கி அவற்றின்பால் அவநம்பிக்கையை வளர்க்கிறது. மாந்திரீகத் தன்மையை ஏற்று கருத்து விலகல்களுக்கு இடமளித்து ஒருமைப்பாட்டைவிட தனித்துவத்தையும் பேரரசியலை விட நுண்ணரசியலையும் போற்றுகிறது. மெய்மை என்பது சமூகக்கட்டுமானம் என்றும், உலகையாக்கும் மனிதன் உலகினால் ஆக்கப்பட்ட பொருளாகிறான் என்றும் கூறுகிறது. 'சுயம்' (Self) என்று நாம் கருதுவது பொருளற்ற ஒன்று என்றும், சுயம் வைக்கப்படவேண்டிய இடத்தில் பல்வேறுபட்ட உணர்ச்சி நிலைகளையும் கீழ்த்தரமான ஆசைகளையும் வைத்துப் போற்றுகிறது.

'நவீன காலத்தில் இறைவன் இறந்துவிட்டான்' என்றது சுயம். அப்படிக் கூறிய சுயமே இப்போது இறந்துவிட்டது என்கிறது பின்நவீனம். பின் நவீனம் என்ற புதிய பார்வையில் விளிம்பு நிலையில் இருந்த சில கருத்துநிலைகள் எடுத்துக்காட்டாக, பெண்ணியம், பல்லினப் பண்பாட்டிசைவு போன்ற விவாதத்தின் மையப் பொருள்களாக மாறிவிட்டன. மனித இருப்பை தூய்மையாக காத்து வந்த ஒழுக்கவியற்கோட்பாடுகள் பொருளற்ற, பயனற்ற ஒன்றாகும் என்ற கருத்தை பரப்பி உலகில் விழுமிய முறையையே அடியோடு அழித்துவிட்டது. எப்படியும் மனிதன் வாழலாம் என்ற மாயையை பரப்பி அழிவுகளிற்கும் இறப்பிற்குரிய நோய்களின் உருவாக்கத்திற்கும் பின்நவீனத்துவம் வழிகோலியது எனலாம்.

இக்காலத்திற்குரிய அறிஞர்களாக பலரை நாம் குறிப்பிடலாம். குறிப்பாக நவீனத்துவம் என்பது இறந்துவிட்டது என்பதை வரையறை செய்து "பின் நவீனத்துவக் கட்டக்கலையின் மொழி" என்ற நூலை எழுதிய கட்டக் கலைஞர் சாள்ஸ் ஜெங்க்ஸ் (1939) "பின் நவீனத்துவ நிலை; அறிவு பற்றிய அறிக்கை" என்ற நூலை எழுதிய பிரேஞ்சு மெய்யியல்வாதி ஜான் பிரான்சுவா லியோற்றா (1926), "மெய்யியலும் இயற்கையின் கண்ணாடியும்" என்ற நூலை எழுதிய அமெரிக்க மெய்யியல்வாதி றிச்சாட் றோட்டி என்போரையும் இங்கு குறிப்பிடுவது சாலச் சிறந்தது ஆகும்.

### மனித இருப்பு

பூமியில் இருக்கும் அனைத்துப் படைப்புப் பொருள்களையும் நான்கு பகுப்பிற்குள் உள்ளடக்குவர் அறிஞர். தாது, தாவரம், மிருகம், மனிதன் என்பன இப்பகுப்புக்களாகும். இப்பகுப்பில் உயர்வான, உன்னதமான இடத்தில் மனிதன் இருக்கிறான். அனைத்தையும் தன் அதிகாரத்தில் வைத்து நெறிப்படுத்துபவன் மனிதன் ஆவான். எனவே, மனித இருப்பானது இவ்வுலகில் தேவையானதும் பாதுகாக்கப்படவேண்டியதும் ஆகும். மனித இருப்பைப் பலரும் பலவாறு வரையறைப் படுத்துவர். ஒவ்வோர் துறையும் மனித இருப்பை ஒவ்வோர் கோணத்தில் நோக்குகிறது.

இந்த பின் நவீனத்துவ காலத்தில் மனித இருப்பானது கேள்விக்குரியதொன்றாக மாறிவிட்டது. வரலாறு முன்பு என்றுமே கண்டிராத புதிய சிந்தனைகளையும், பழக்கவழக்கங்களையும் இக்காலம் இறைத்த வண்ணமாக இருக்கிறது. பண்டைய பாரம்பரியங்களும், ஒழுக்கவியற் கோட்பாடுகளும் கேள்விக்குறியாக மாறிவிட்ட ஒரு நிலையை நாம் அவதானிக்கின்றோம். எங்கும் போரும், அழிவும் தாண்டவமாடுகிறது. மனித இருப்பு அத்திபாரம் இல்லாத கட்டடம்போல் ஆட்டம் காணுகிறது. மனித இருப்பு எந்நேரமும் மறையக்கூடிய ஒரு சூழமைவு காணப்படுகிறது. உலக நாடுகள் தயாரித்து வைத்திருக்கும் அணு ஆயுதங்கள், மனித இருப்பை பூண்டோடு அழிக்க மனிதன் தயாரித்த பொருள்களாகும். ஒரு காலத்தில் இப்பூமியானது மனிதர் இல்லாத வெறும் பாலைவனமாக மாறும் என்றால் மிகையாகாது.

**பி.தே.யூட்தாஸ்**

பின் நவீனத்துவம், அதன் விளைவுகளில் ஒன்றான பூகோளமயமாதல் ஆகிய இரண்டு காரணிகளுள் இன்று பிரபல்யமாகப் பேசப்படும் கருத்துக்களாகும். இவ்விரண்டு காரணிகளும் மனிதனை தமது கவர்ச்சிப்பிடிக்குள் இழுத்துவிட்டன. அதிகம் அதிகமாக நுகர்வுக் கலாசாரத்திற்குள்ளும், சடப்பொருள்வாத ஈர்ப்புகளுக்குள்ளும் அடிமைப்பட்ட மனிதன் தனது இருப்பிற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து நிலையை உணரத்தவறுகிறான்.

பின் நவீனத்துவ காலத்து வாழ்க்கை முறை, குறிப்பாக ஆசையையும், இன்ப உணர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு நகர்த்தப்படும் செயற்பாடுகள், மனித இருப்பைப் பாதிக்கின்றன. இவற்றின் விளைவுகள் பாரதூரமானவையாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, உயிர்க்கொல்லி நோய்கள் (Aids, Sars) சூழல்மாசடைதல், உலக அதிகாரத்தில் சமநிலையற்ற நிலை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே, பின் நவீனத்துவ காலத்தில் மனித இருப்பானது பாதுகாக்கப்படவேண்டுமாயின் நாடுகளும், அரசுகளும் இந்நற்செயலுக்காக உழைக்க முன்வரவேண்டும். மனித குலம் முழுவதும் இந்தப் பயங்கரம் பற்றிய பூரண அறிவை, தகவலைப் பெற்றிருக்கவேண்டும். இருப்பைப் பாதுகாத்தல் போன்ற புதிய சிந்தனைகளும், செயற்பாடுகளும் மக்கள் மத்தியில் இருந்து வெளிக்கொணரப்படவேண்டும். எனவேதான், மனித இருப்பு நீண்டகாலமாக இப்பூமியிலே தங்கியிருக்க வாய்ப்பு ஏற்படும். பூமி மனிதனின் சொத்தாகும். பூமியின் வளங்கள் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட கொடை என மதங்கள் கூறுகின்றன. எனவே, இக்கொடையை பயன்படுத்த வேண்டிய மனிதனின் இருப்பு கேள்விக் குறியானால் பூமி என்று ஒன்று இருப்பது பயனில்லை என்றே கூறமுடியும். ★

# தென்மராட்சிப் பிரதேசத்தில் 3011 பேருக்கு உதவிப்பணம்

தென்மராட்சி,டிசெ.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 3 ஆயிரத்து 11பேருக்கு டிசெம்பர் மாதத்தில் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், புதிதாக 124 பேருக்கு ஒரு வருடத்திற்கான தற்காலிக கொடுப்பனவும் டிசெம்பர் மாதம் வழங்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் இக்கொடுப்பனவு அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

(ஓ-117)

## மின் இணைப்பு பணிகள்

வரணி,டிசெ.22

மின்சாரக் கம்பங்கள் பற்றாக் குறையால் கொடிகாமம் - வரணி பிரதான பாதையில் மின்விநியோகப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்போது மின்கம்பங்கள் கிடைத்துள்ளன. இதனையடுத்து கொடிகாமம் மாவீரர் மயானப் பகுதியில் இருந்து சுட்டிபுரம் வரையிலான இடத்துக்கு மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன.

(ஓ-170)

## கல்விச்சாலைக் காட்சிகள்



உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலைய முன்பள்ளி மாணவர்களுக்கான பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது சிறுமிகள் வழங்கிய நடன நிகழ்வைப் படத்தில் காணலாம்.

*(படம்:தெல்லிப்பழைச் செய்தியாளர்)*



சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது ஓய்வுபெற்ற அதிபரும், நூல் வெளியீட்டுச் சபையின் செயலாளருமான மு.தம்பிஜயா நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்:சண்டிலிப்பாய்ச் செய்தியாளர்)*



கொடிகாமம் அரசினர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், வித்தியாலய உப அதிபர் திருமதி தெ.துரைச்சாமி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.



ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சியை யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் திறந்துவைப்பதை படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியமும் படத்தில் காணப்படுகின்றார்.

*(படம்:அச்சுவேலிச் செய்தியாளர்)*

## சின்னஞ்சிறு விளம்பரம்

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் ரூபா 42/-, தொகைக்கு ரூபா 40/-, அதிவிசேட பேட்டுக் குஞ்சுகள் 62/-, 22.12.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டி பதிவுசெய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(26014)

### தவறிவிட்டது

ஜெயபாலசிங்கம் லஜீபன் என்பவரது விசேட அ.அ.(0902028391), வங்கிப் புத்தகம் (N.S.B.), என்பன யாழ். நகர்ப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 76/2, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். T.P.:077-7068750. (26152)

இருபாலை கிழக்கு, கோப்பாயைச சேர்ந்த ஈஸ்வரநாதன் நிமலன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 781202444V), தொழில் அட்டை, சிட்டைகள் அடங்கிய பேர்ஸ் 19.12.2003 யாழ். நகரப் பகுதிக்கும் பலாலி வீதி ஊடாக இருபாலைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை வீதி, AMT ரான்ஸ்போட்டில் ஒப்படைத்துதவவும். T.P.:0777 686220. (26145).

மல்லாவி, துணுக்காயைச் சேர்ந்த சண்முகம் சத்யாவதி என்பவருடைய தேசிய அ.அ.(இல.837032814V) 19.12.2003 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் கைதடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீபத்மறஞ்சனா படமாடம் (சாவகச்சேரி) கடையில் ஒப்படைத்துதவவும். (26143)

வண்ணார்பண்ணைக்கும் யாழ்/ மத்திய கல்லூரிக்கும் இடையில் ஆண்கள் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். திருமதி பாலகுமாரன சிவமதி, சுகவாழ்வு நிலையம், இல.16, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (26122)

அண்ணலிங்கம் மனோன்மணி என்பவரின் மாதாந்த உதவித் தொகை பெறும் முதியோர் அடையாள அட்டை 16.12.2003 செவ்வாயன்று மல்லாகம் 7 ஆம் கட்டைக்கும், தபாற் கந்தோருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இ.உதயகுமார், சேச் லேன், மல்லாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (26133)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 27 வயது, செவ்வாய்க்குற்றமற்ற பட்டதாரி ஆசிரியருக்கு அழகான, மெல்லிய, மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமில்லையேல் உடன் திருப்பியனுப்பப்படும். தொடர்பு: விள. இல. 2126, மே/பா. உதயன்.(26128)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 இல் பிறந்த, சதயம் நட்சத்திரம், பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு சிவந்த, அழகிய மணப்பெண் தேவை. மணமகன் தைமாதம் இலங்கை வருகின்றார். தொடர்பு: விளம்பர இல.2128, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26157)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1969 இல் பிறந்த, உத்தராட நட்சத்திரம், 8 இல் செவ்வாய் உள்ள ஜேர்மனியில் பிரஜாவுரிமை பெற்ற அழகான மணமகனுக்கு நற்குணமும், நற்பண்புமுள்ள பொருத்தமான அழகிய, உயரமுள்ள மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.2129, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26158)

### வானொலி நாடகநூல்


வானொலியில் "ஆராதனை" நாடகம் கேட்டீர்களா? 365 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் வானொலி நாடகம் எழுதுவது எப்படி? என்ற ஒரே ஒரு நூலைப் படித்தால் நீங்களும் அப்படி நாடகம் எழுதலாம்.(26159)

### திருமண சேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971, சித்திரை, செவ்வாய் 4 நற்பண்புள்ள, அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு இருபாலை, சுதுமலை, கந்தர்மடம், முதலான இடங்களிலிருந்து படித்த, அழகான, அரச உத்தியோகமுள்ள மகள்கள் தேவை. தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (26109)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 | 01 |
| - | - |
| 06 | 01 |
| - | - |
| 1928 | 2003 |

அமரர் **தம்பிஜயா சின்னையா** (இராசு)

திதி: சதுர்த்தசி

*ஆண்டு ஒன்று ஆயிடினும் ஆறவில்லை எம் துயர்*
*மீண்டு ஒருமுறை வருவீரென வாசலையே பார்க்கின்றோம்*
*மாண்டு போன உம்மையே மனதினிலே நினைக்கின்றோம்*
*ஈண்டு எங்கு இனி காண்பது உம் முகம்?*

- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள், மைத்துனர்.

குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (25948) (24-11-16)

---

## 31ஆம் நாள் நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 | 22 |
| - | - |
| 06 | 11 |
| - | - |
| 1943 | 2003 |

திருமதி **தவமணி அருணாசலம்**

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்முடன்
வாழ்ந்திட்ட தாயே!
உங்கள் பிரிவைத் தாங்கமுடியாமல்
தவிக்கின்றோம் அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று (22.12.2003) திங்கட்கிழமை முற்பகல் எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

உடுவில் தெற்கு,
புதுமடம், மானிப்பாய். (சி-32105) (2411-16)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03 | 22 |
| - | - |
| 08 | 11 |
| - | - |
| 1926 | 2003 |

அமரர் **சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை**

(அச்செழு - நீர்வேலி)

முப்பத்தொரு நாளுமாயிற்றோ நீர் எமைவிட்டுப் பிரிந்து
எப்போதும் உங்கள் நினைவுடனேயே நாமிங்கு வாழ்கின்றோம்
இன்று ஆத்மா சாந்தியுற ஆண்டவனை வேண்டுகிறோம்
என்றும் உமது திருமுகந்தான் எங்கள் கண்களில் தெரிகின்றதே!
ஓம் சாந்தி!

இன்று (22.12.2003) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், குடும்பத்தினர்.

அச்செழு,
நீர்வேலி. (26112) (24-11-16)

---


## விசேட சலுகை
## அருள் கொமினிக்கேசன்

நத்தார் பண்டிகையை குதூகலமாகக் கொண்டாடும் எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பண்டிகைக் காலத்தில் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ

- ஒரு நிமிடத்திற்கான கட்டணம் 5/-
- கையடக்கத் தொலைபேசிகளுக்கான அழைப்புகள் 25/-

இச்சலுகை திங்கள் 22.12.2003 தொடக்கம் 25.12.2003 வியாழக்கிழமை வரை.

T.P.: 222 3536
Fax: 222 7097
E-Mail: arulnet @ hotmail. com.

இல.1, பிறவுண் வீதி,
நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.


---


## பண்டிகைக்கால மலிவு விற்பனை

22.12.2003 தொடக்கம்
31.12.2003 வரை

- ஐங்கரன் வீடியோ CD படங்கள்
- ஐங்கரன் ஓடியோ CDகள்
- தமிழ், ஆங்கில DVD படங்கள்
- MP 3 CD கள்
- புதிய, பழைய தமிழ் ஓடியோ, வீடியோ பாடல்கள்
- புதிய, பழைய தமிழ் வீடியோ படங்கள்
- Soft ware CD கள்

அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

**அஸ்டி எலக்ரோனிக்ஸ்**

15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-32164) (24-11-16)


---

## இரண்டாம் ஆண்டு நினைவுநாள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07 | 13 |
| - | - |
| 12 | 12 |
| - | - |
| 1951 | 2001 |

சமரபாகு முருகலஷ்மியைச் சேர்ந்த கட்டடக் கலைஞரும் அச்சகருமாகிய

கலாஜோதி **செல்லர் கற்பூரணன்**

திதி: 22.12.2003

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முருகலஷ்மி, சமரபாகு,
வல்வெட்டித்துறை. (25977) (24-11-16)

சகோதரி சி.சரஸ்வதி.

---

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 | 08 |
| - | - |
| 01 | 01 |
| - | - |
| 1923 | [illegible]97 |

அமரர்

**பொன்னையா நவரத்தினசிங்கம்**

சமாதான நீதிவான்

(உரிமையாளர், யாழ்தேவி ரான்ஸ்போட் சேவிஸ்)

திதி: 22.12.2003

எங்கள் குடும்பத் தலைவனாய் அன்பின் திருவுருவாய்
வாழ்ந்து எங்களுக்கு வாழ்வளித்த வழிகாட்டியே!
எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களுக்காகவே பிரார்த்தித்து
எங்கள் நினைவுடனேயே இயற்கை எய்திய
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஏழு
கடந்தாலும் உங்கள் திருவுருவம், பாசநினைவுகள்
என்றென்றும் எங்கள் மனதில் நீங்காது நிலைத்து நிற்கும்
நீங்கள் காட்டிய பாதையிலேயே நாங்களும் வாழ்ந்து
என்றும் உங்கள் இலட்சியத்தைப் பின்பற்றி நிற்போம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், உறவினர்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (26097) (26-24-11-16)

# ஆரோக்கிய சமூகத்தை வளர்க்க பாடசாலைகளில் தற்காப்புக் கலை

அறுபத்துநான்கு கலைகளுக்குள்ளே தற்பாதுகாப்பும் ஓர் அங்கமாகும். தற்பாதுகாப்பு என்பது தன்னைப் பாதுகாத்தல் என்று பொருள்படும். அத்துடன், இது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையுமாகும். இந்த நடவடிக்கைகளை ஒரு கலைவடிவத்தினுள் புகுத்தி அதற்கு ஒரு முழுமை வடிவம் கொடுக்கப்படுவதே தற்காப்புக் கலை என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

குங்ஃபூ, கராத்தே ஆகிய இரண்டும் பிரபல்யம்மிக்க தற்காப்புக் கலைகள். குங்ஃபூவை சீனத்தற்காப்புக் கலை எனவும் கராத்தேயை ஜப்பானிய தற்காப்புக் கலை எனவும் அழைப்பர்.

மனித சரீரத்திலுள்ள சக்தி நாளப் புள்ளிகளைக் கண்டறிந்து அவற்றைத் திறந்துவிடுவதன் மூலம் முற்றாக நீக்கமுடியும். அந்த சக்தி நாளப் புள்ளிகளை கடுமையாகத் தாக்கும் கலையே 'குங்ஃபூ' ஆகும்.

சீனாவிலுள்ள ஒக்சினாவா என்றதவில் 'சீனா பொக்ஸிங்' என்று அழைக்கப்பட்ட 'கிம்போ' என்ற கலையிலிருந்தே 'கராத்தே' அபிவிருத்தியடைந்தது.

1922ஆம் ஆண்டு ஜின்சின் புன் அகோஷி என்பவரால் கராத்தே முதன் முதலில் செய்முறைப்படுத்திக் காட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் பெருவளர்ச்சியடைந்து வந்த கராத்தேக் கலையை மேலும் மேம்படுத்துவதற்காக 1970ஆம் ஆண்டு சர்வதேச கராத்தேச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

கராத்தே போட்டிகளின்போது கனிஷ்ட பெண்கள் பிரிவுகளுக்கு இரண்டு நிமிடமும்; சிரேஷ்ட பிரிவுக்கு மூன்று நிமிடமும் வழங்கப்படுவது விதியாகும். குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிவு எட்டப்படாவிடின் மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்படும்.

போட்டிகளின்போது தாக்குதலுக்கு என வரையறுக்கப்பட்ட உடலில் எல்லைப் பரப்பில், சரியான காலக் கணக்கீட்டில் சிறந்த நுட்ப முறைகளைப் பயன்படுத்தி வேகமாக அடிக்கின்ற அடியானது மிகவும் சக்தி வாய்ந்ததாக அமையும்.

**தே.ஸ்ரீதரன்**

8 மீற்றர் நீளமும், 8 மீற்றர் அகலமும் கொண்ட ஒரு சதுர வடிவத் தளத்தில் போட்டி நடத்தப்படும். போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் எதிராளிகள் இருவரும் ஒருவருக்கொருவர் வணக்கம் செலுத்துதல், பின்னர் இருவரும் இணைந்து நடுவருக்கு வணக்கம் செலுத்துதல் என்பன முக்கியமான விடயங்களாகும்.

போட்டி முடிவின்போதும் இவ்வாறு வணக்கம் செய்தல் வேண்டும். போட்டியை ஆரம்பித்தல், முடித்தல், புள்ளி வழங்குதல், எச்சரிக்கை செய்தல், தவறுகளைச் சுட்டிக் காட்டுதல் ஆகிய பணிகளை நடுவர் மேற்கொண்டிருப்பார்.

உள்ளுறுப்புக்கள், வெளியுறுப்புக்கள் என்பவற்றுடன் உள்ளத்தையும் உறுதிப்படுத்துவதாய் அமையும் இந்தக் கலையானது, எதிராளிகளிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுகின்ற ஒரு தற்காப்புக் கலையாகவும் விளங்குகின்றது.

எதிராளியின் தாக்குதலை எதிர்கொள்ளுதல், அவற்றைத் தடுத்தல், பதிலடி கொடுத்தல் ஆகிய விடயங்கள் கராத்தே போட்டிகளில் முக்கியமானவை.

தூய வெண்ணிறத்தாலான பிஜாமாவும் மேல் அங்கியும் கராத்தே போட்டிக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

கராத்தே கலையைப் பயின்றவர்களுக்கு பல்வேறு தரப்படுத்தல்கள் வழங்கப்படும். ஒவ்வொரு தரங்களையும் வெளிப்படுத்துவதற்காக ஒவ்வொரு நிறங்களிலான இடுப்புப் பட்டிகள் வழங்கப்படுகின்றன.

கடினப்பயிற்சி, குருபக்தி, கலையைப் போற்றும் உன்னத பண்பு ஆகியன அமையப்பெற்ற ஒருவரிடமே இக் கலை கைவரப்பெற்று விளங்கும்.

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை தற்போது இக்கலை ஓரளவுக்கு பரவலாக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும், அரசாங்கம் இக் கலைக்கு பெரிய அளவில் முக்கியத்துவம் அளித்து ஊக்குவிப்பதாகத் தெரியவில்லை. பாடசாலை மட்டங்களில் கராத்தே கலை ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்படும் போது திடகாத்திரமான - ஆரோக்கியம் மிக்க ஒரு சமூகத்தை வளர்த்தெடுக்க முடியும் என்று உறுதியாக நம்பலாம்.

# காணி உரிமையாளரின் பிரசன்னம் மிதிவெடி அகற்றுகையில் அவசியமா?

## முறைப்பாடு ஒன்றையடுத்து எழுந்துள்ள சர்ச்சை

யாழ்ப்பாணம்,டிசெ.22

கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் காணி ஒன்றில் பணியில் ஈடுபடும்போது அக்காணி உரிமையாளர் அங்கு பிரசன்னமாகி இருப்பது அவசியமா? மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் பதியப்பட்ட முறைப்பாடு ஒன்றையடுத்தே இவ்வாறு ஒரு சர்ச்சை எழுந்துள்ளது.

மிதிவெடி அகற்றும்போது காணி உரிமையாளரின் பிரசன்னமில்லாமல் சர்வதேச நிறுவனம் ஒன்று மிதிவெடி அகற்றியதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் மேற்படி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த விக்னேஸ்வரன் சோதிகலா என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டதாவது:-

சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாகச் சொந்த வீட்டில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானைப் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருகிறோம்.

இடம்பெயரும்போது பெறுமதி வாய்ந்த தங்க நகைகளையும் மேலும் சில முக்கிய பொருள்களையும் எமது காணியில் புதைத்தோம். வீட்டுப் பாவனைப் பொருள்கள் சிலவற்றை மட்டும் எடுத்துச்சென்றோம்.

தற்போது மீளக்குடியமர்வதற்காக சொந்த வீட்டிற்கு சென்றோம். அங்கு மிதிவெடி எச்சரிக்கைப் பலகைகள் நடப்பட்டிருந்தன.

இதனால் எமது கிராம சேவையாளரிடம் இது தொடர்பாக முறைப்பாடு செய்தோம். இதன் பின்னர் எமது வீடு உட்பட அப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் நிறுவனம் ஒன்று ஈடுபட்டது. அப்போது எமது காணியில் மிதிவெடி அகற்றப்படும் போது நாம் அங்கிருக்கவில்லை. எமது வீட்டில் மிதிவெடி அகற்றும் போது எம்மால் முன்னர் புதைத்துவைக்கப்பட்ட தங்க நகைகள் உட்பட அனைத்துப் பொருள்களும் காணாமற்போய்விட்டன.

தனிநபருடைய வாழ்விடத்தில் மிதிவெடி அகற்றும்போது காணி உரிமையாளர் பிரசன்னமாகி இருக்க வேண்டும் என்பது நியதி.

அதனை மீறி குறிப்பிட்ட சர்வதேச நிறுவனம் தனது பணியை மேற்கொண்டுள்ளது. இது அடிப்படை மனித உரிமை மீறும் செயல் ஆகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-5-ரி)

## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட அனைத்து வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு விஞ்ஞான பீட பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-5)

# தர்மசிந்தனை அருகி வருகின்றது திருவாவடுதுறை ஆதீனம் கவலை

**காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சைவ அறப்பணி நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. அந்த நிகழ்வு பற்றிய தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.**

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இந்து கலாசார அமைச்சின் நிதி உதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட சைவ அறப்பணி நிலையம் கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குருமகா சன்னிதானம் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகளால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்து கலாசார அமைச்சின் அழைப்பையேற்று திறப்பு விழாவிற்கு வருகை தந்த திருவாவடுதுறை ஆதீன முதல்வருக்கு காரைநகரில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. காரைநகர் வலந்தலைச் சந்தியில் இருந்து ஈழத்துச் சிதம்பரம் வரையுள்ள மக்கள் - இல்லங்கள், வர்த்தக நிலையங்கள், சமூக நிறுவனங்கள், ஆலயங்கள் முன்னால் நிறைகுடம் வைத்து மலர்மாலை அணிவித்து சுவாமிகளை வரவேற்றனர்.

சுவாமிகளின் வருகையையொட்டி காரைநகர் விழாக்கோலம் பூண்டு எழுச்சி பெற்றிருந்தது. பெருந்தொகையான அடியார்கள் இந்த வரவேற்பு ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கடந்த 8ஆம் திகதி ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற்ற மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்தும், எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள திருவாதிரை உற்சவத்தை முன்னிட்டும் இந்த அறப்பணி நிலையம் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அன்றையதினம் காலையில் திருவாவடுதுறை ஆதீன குருமகா சன்னிதானம் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைத் தொடர்ந்து ஈழத்துச் சிதம்பரத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் அறப்பணி நிலையத்தை திறந்துவைத்தார்.

அறப்பணி நிலையம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற சமய நிகழ்வில் திருவாவடுதுறை ஆதீன குருமகாசன்னிதானம் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அருளுரை நிகழ்த்தினார்.



அவர் தமது உரையில், சைவ சமயம் தொன்மையானது, புனிதமானது. இந்த மதத்தில் பிறந்த நாம் புண்ணியம் செய்தவர்கள். இந்துமதம் கூறும் சித்தாந்தங்கள் சமூகத்திற்கும், வாழ்க்கைக்கும் பொருத்தமானவை. இறைவனை அடைவதற்கு இரண்டு மார்க்கங்கள் உண்டு. ஒன்று பக்தி மார்க்கம். மற்றையது ஞான மார்க்கம். இரண்டும் இறைவனை அடைய உதவும் மார்க்கங்களே.

மெய்கண்டதேவர், உமாபதி சிவாச்சாரியார் ஆகியோருடைய பரம்பரைதான் திருவாவடுதுறை ஆதீனம். இங்கு நடராஜப்பெருமான் குல தெய்வமாக இருக்கின்றார். ஆறுகால அபிஷேகங்களும், நித்திய பூசையில் திருக்கோவையாரும் ஓதப்படுகின்றது.

**அண்மையில் திறந்துவைக்கப்பட்ட சைவ அறப்பணி நிலையத்தின் முகப்புத் தோற்றம்**



ஈழத்துச் சிதம்பரத்தில் உள்ள நடராஜப் பெருமானின் சிறப்பைப் பார்த்தேன். இது மிக அபூர்வமான திருவுருவம். இந்த மூர்த்தியின் திருவாசியில் ஐம்பத்தொரு சுடர்கள் மேல் நோக்கி இருப்பது தனிச்சிறப்பாகும். தமிழ்நாட்டில் ஒருசில இடங்களில் தான் இத்தகைய அழகிய பதஞ்சலி, வியாக்கிரமபாதரோடு கூடிய மூர்த்தியைக் காணலாம். இத்தகைய சிறப்புமிக்க நடேசப்பெருமானுடைய ஆலயத்தைக் கொண்டுள்ள இவ்வூர் மக்கள் பாக்கியசாலிகள். இந்த ஆனந்தமூர்த்தியை வழிபட்ட பலனே நான் இரண்டாவது தடவையாகவும் இங்கு வருகை தரக்கூடியதாகவிருந்தது.

இந்து கலாசார அமைச்சினதும் அமைச்சரினதும் செயற்பாடுகளை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் எனது வருகை அமைந்தது. புதிதாக ஆலயங்களை நிறுவுவதை விட சேதமடைந்த, கைவிடப்பட்ட ஆலயங்களைப் புனரமைப்பது நான்குமடங்கு புண்ணியத்தைத் தரக்கூடியது. நல்லை ஆதீனத்தை நல்லமுறையில் பயன்படுத்தி அனைவரும் நன்மை பெறவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

நல்லைநகர் ஆறுமுக நாவலருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது திருவாவடுதுறை ஆதீனம். அத்தகைய பெருமைமிக்க மகான் பிறந்த மண்ணுக்கு வருகை தந்திருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நாவலரது குருபூசைத்தினத்தன்று இந்த அறப்பணி நிலையத்தைத் திறந்துவைக்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரியது. இங்கு மேற்கொள்ளப்படும் அறப்பணிகள் சிறப்பாக அமையவேண்டும் - என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் - என்றார்.

மாவை ஆதீனம் மகாராஜஸ்ரீ து.சண்முகநாதக்குருக்கள் தமது உரையில்:-

ஏனைய மதங்களின் செயற்பாடுகள் இங்கு திடீரென முளை கொண்டுள்ளன. எமது சமயத்தை வளர்ப்பதற்கு சமய நிறுவனங்களான ஆதீனங்கள் முன்வரவேண்டும்.

ஆதீனங்களில் மூத்தது திருவாவடுதுறை ஆதீனம். சைவத்தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காகவே சுவாமிகள் கிராமங்கள், நகரங்கள் தோறும் செல்கின்றார். திருவாவடுதுறை ஆதீனம் சென்று சுவாமிகளைத் தரிசிப்பது மிகவும் கடினம். இங்கு அவரை இலகுவாகத் தரிசிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளமை வரவேற்கத்தக்கதே.

ஆறுமுகத்தை நாவலராக்கித் தந்த பெருமை திருவாவடுதுறை ஆதீனத்திற்கு உரியது. நாவலர் இல்லையெனில் சமயம் இல்லை; மொழி இல்லை. அந்த நாவலரை எமக்கு தந்த குருமகா சந்நிதானம் இன்று எம்முன் வந்துள்ளார் - என்றார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் உரையில் -

ஆலயங்கள் அறப்பணி நிலையங்களாக மாறவேண்டும். மக்களின் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்கு உதவுவதற்கு அவை முன்வரவேண்டும். இந்து கலாசார அமைச்சின் ஊடாக கிடைக்கின்ற நிதியை மக்களின் சமூக மேம்பாட்டிற்கும், அபிவிருத்திக்குமே பயன்படுத்த விரும்புகின்றேன். இதனால்தான், இத்தகைய அறப்பணி நிலையங்களை குடாநாட்டில் நிறுவி மக்களின் சமூக, பொருளாதார உயர்விற்கு வழிவகுத்து வருகின்றோம்.

கடந்தகால போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்குகின்றார்கள். அவர்களுக்கு உதவுவதற்கு அரசும், மனம் படைத்தவர்களும் முன்வரவேண்டும் - என்றார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தமது உரையில் -

யாழ். மாவட்டத்திலே 90 சதவீதமான இந்துமக்கள் வாழ்கின்றனர். அவர்களுடைய வாழ்வு சீர்செய்யப்படவேண்டும். ஏழ்மையின் காரணமாக ஏற்படும் மதமாற்றத்தைத் தவிர்த்து மக்களுக்கு உதவவேண்டிய தேவை உண்டு. மக்களுடைய சமூக, பொருளாதார ஆன்மீக முன்னேற்றத்திற்காக சிவாச்சாரியார்கள் உழைக்கவேண்டும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் குருமார்களுக்கான பயிற்சித் திட்டம் இதனை நிரந்தர பயிற்சித் திட்டமாக மாற்றி ஈழத்துச் சிதம்பரச் சுற்றாடலில் நடைமுறைப்படுத்த வேண்டும் - என்று கூறினார்.

இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தமது உரையில் திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்ட ஈழநாடு, சுவாமிகளின் வருகையுடன் மீண்டும் சிவபூமியாக மாறவேண்டும் யுத்தத்தினால் அழிவுண்ட இப்பகுதிகள் மீண்டும் புதுப்பொலிவு பெறவேண்டும் - என்றார்.

தொடர்ந்து திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் அமைச்சர் மகேஸ்வரனுக்கு 'அறப்பணிச் செல்வர்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

**தொகுப்பு: காரைநகர் செய்தியாளர்**

காரைநகரில் கடந்த 15 ஆண்டுகளுக்குப் பின் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட மிகப்பெரிய சமய விழாவாக இந்த சைவ அறப்பணி நிலையத் திறப்புவிழா நடைபெற்றது.

இந்த சைவ அறப்பணி நிலையத்தில் தினமும் அன்னதானம், யாத்திரிகர்களுக்கான தங்குமிடம், அறநெறிப் பாடசாலை, வறிய பாடசாலை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள், குருமார்களுக்கான பயிற்சி நிலையம், சமஸ்கிருத சைவ நூல்கள் அடங்கிய நூல் நிலையம், கணனிப் பயிற்சி நிலையம் உட்பட பல்வேறு அறப்பணிகளை நிகழ்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்திய சிற்பக் கலைஞர்களின் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் 120 அடி நீளத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த அறப்பணி நிலையத்தில் மேற்குறிப்பிட்டது போல பல்வேறு அறப்பணிகள் இடம்பெற்று ஈழத்து சைவர்கள் மத்தியில் முன்மாதிரியாக வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

★

## ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை

த.தவசேகர் B.Sc. வகுப்பு விவரம்

| | | | |
|---|---|---|---|
| டானியல் | வெலிங்டன் சந்தி | சனி, ஞாயிறு | 10-12, 2-4 |
| Science Hall | கன்னாதிட்டி | செவ்., வியா. | 10.30 - 1.00 |
| கிறிஸ்ரல் | நெல்லியடி | புதன், ஞாயிறு | 4-6 (ப) |
| ஞானோதயா | சாவகச்சேரி | செவ்., வெள்ளி | 2.30-4.30 |
| ஈசன் | இணுவில் | திங்., வெள்ளி | 7-8.30 |

★ இவ்வாசிரியரின் வழிகாட்டி நூலினை 25.12.2003 இலிருந்து இந்நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(26116) (24)

## அவசர பொதுக்கூட்டம்

### கல்விக் கல்லூரி - டிப்ளோமா ஆசிரியர் சங்கம்

காலம்: 24-12-2003 புதன்

நேரம்: காலை 10.00 மணி

இடம்: புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

விடயம்: ▲ புதிய நிர்வாகிகள் தெரிவு

குறிப்பு: ▲ கலைமாணி பட்டப் படிப்புக்கு வெளிவாரியாக பதிவுசெய்தவர் பதிவுப் புத்தகத்துடன் வரவும்.

▲ டிப்ளோமா பட்டம் பெற்று நியமனம் கிடைக்காதோரும் கலந்து கொள்ளவும்.

செயலாளர்.
கல்விக் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(26101)(34-11-16)

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை (வ.உ.)

### தற்காலிக உணவக முகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் தற்காலிக உணவக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்க்காணும் தகுதி இருப்பின் விண்ணப்பிக்கலாம் என கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்ப முடிவு திகதி: 27.12.2003 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணி

சங்கத்தில் 10/- ரூபா செலுத்திப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

**தகைமைகள்**

01. கல்வித் தகைமைகள்: க.பொ.த. (சாதாரணம்) சித்தி
02. வயதெல்லை: 18-45

சங்கத்தால் விதிக்கப்படும் பிணை செலுத்த வேண்டும்.
சம்பளம் நாளொன்றுக்கு ரூபா 91.66 சதம்
(கூ.வே. ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்)

\- பொது முகாமையாளர்.

(சி-32163) (24-11-16)


## மிருதங்க அரங்கேற்றம்

கலாபூஷணம் க.ப.சின்னராசாவின் மாணவனும் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை மாணவனுமான துரைசிங்கம் - சுபேஷின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ச.மு.ரவிக்குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர்.

பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் சபா. ஜெயராசா, இசைப் பேரரசு ந.வி.மு.நவரத்தினம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இசைத்துறை முன்னாள் விரிவுரையாளர் ஸ்ரீமதி சிவசக்தி சிவநேசன் கலந்துகொள்வார். (எ-4)

## அறநெறிப் பாடசாலை கட்டடம் திறப்பு

சுழிபுரம் வடக்கு போகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலைக்கான புதிதாக நிறுவப்பட்ட கட்டடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. ஆசிரியர் சி.சிவானந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் மு.தம்பிஐயா கட்டடத்தைத் திறந்துவைத்தார். (எ-135)


## விற்பனைக்கு

✦ பிரம்படி லேன், கொக்குவிலில் 1½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடும்

✦ கலட்டி அம்மன் கோயில் வீதியில் 1½ பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
திரு.த.இரட்ணராஜா,
லக்ஷ்மி பேக்கரி
மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்.

## $O^+$ சிறுநீரகம் தேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட முன்னாள் செயலாளர் **திரு.பொன்.விநாயகமூர்த்தி** அவர்களுக்கு அவசரமாக $O^+$ ரக சிறுநீரகம் தேவைப்படுகிறது. தானமாக வழங்கக்கூடியவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

**சன்மானம் வழங்கப்படும்.**

தொடர்புகளுக்கு: 0777774718, 0777286904, 077-6176890.

K.குமார்,
66/3, பழம்வீதி, கந்தர்மடம்.

(26132)(34-11-16)

## நகரில் நத்தார் விருந்து

## Pillaiyar Inn

24.12.2003 முதல் 31.12.2003 வரை

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பிள்ளையார் இன், ரெஸ்ரோரன்ற் உங்களை வரவேற்கிறது.

24.12.2003 தொடக்கம் 31.12.2003 வரையும் மதியபோசனமும், இரவுச் சாப்பாடும் செய்து கொடுக்கப்படும். (கொக்ரெயிலுடனும், கடலுணவுடனும் பிறைட் சோறு முதலியவை With Cocktail and Seafood) மதியச் சாப்பாடு, இரவுச் சாப்பாடு இரண்டுடனும் Cocktail பரிமாறப்படும்.

உங்கள் ஓடர்களை முன்கூட்டியே பதிவுசெய்யுங்கள்
உங்களுக்குப் பிடித்த உணவுகளும் தயாரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021-222-5595
021-222-2829

(26129)(34-11-16)

## இலவசக் கண்பரிசோதனை

கியுமடிகா, இலங்கை,
மெடி - மேர்சி,
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

உங்கள் கண்பார்வை குறைவாக உள்ளதா?

கவலைப்பட வேண்டாம்; உடனே விஜயம் செய்யுங்கள்!

ஆஸ்திரேலியாவில் இருந்து தருவிக்கப்பட்ட கண் பரிசோதனை இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் சிகிச்சை நடைபெறுகிறது.

வைத்திய நிபுணர்கள் பார்வையிடும் நேரங்கள்:

22-12-2003 } காலை
23-12-2003 } 9 மணி முதல் 5 மணி வரை
24-12-2003 9 மணி - 1 மணிவரை

சிகிச்சை பெற விரும்புவோர், இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள், ஆசீர்வாதம் பெறுங்கள்!

நிர்வாகம்,
கியுமடிகா, இலங்கை.

(26162)(34-11-16)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் உபஅதிபர் திரு.தி.முருகையா அவர்களின்
அன்புத் தந்தையார்

## அமரர் சி.தியாகராசா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வயாவிளான் ம.ம.வி.

(26020) (24-13-16)

# ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 01 - 1933 | 22 - 12 - 2002 |

## அமரர் நிக்கலஸ் ஜோர்ஜ்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - துறைமுக அதிகார சபை, திருகோணமலை)

ஆண்டொன்றாகி விட்டாலும் எங்கள் மனதில்
உங்கள் நினைவு நீங்காது ஐயா!
உங்கள் ஆத்மா சாந்திபெற
அன்பின் யேசுவை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி. மக்கள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

*56, ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(26024) (24-13-16)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 - 02 - 1924 | 22 - 11 - 2003 |

## திருமதி புவனேஸ்வரி இரத்தினராஜா

ஊரெல்லாம் உறங்கும்போது எமக்காக விழித்திருந்தாய்
பாரெல்லாம் உறங்கையிலே உனை நினைந்து அழுகின்றோம்!
பாரமெலாம் சுமக்கலானேன் - மக்களும் நானும் உனக்கிருக்க,
தூரத்தே ஏன் விலகிப்போனாய், ஏதிலரானோம்; ஏங்குகின்றோம்!

அமரத்துவம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்தியம் (சபிண்டீகரணம்) இன்று (22.12.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்று இடம்பெறும் அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் - சி.இரத்தினராஜாவும்.
குடும்பத்தினரும்.

*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.*

(26023) (24-13-16)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 16 - 09 - 1957 | 01 - 01 - 2003 |

## அமரர் குழந்தையர் தெய்வேந்திரம்

உறவினர் மகிழ்ந்திருக்க.........
உற்றார் போற்றியிருக்க வாழ்ந்தீரே...
காலத்தின் கோலத்தால் புலம்பெயர்ந்து
பாச நெஞ்சங்களைப் பார்க்கவென
துடிப்புடனே தாய்நாடு திரும்பி - பின்
காலத்தின் வேகத்தால் கடல் கடந்தீர்,
புத்தாண்டை வரவேற்று - நல்
வாழ்த்துக்களைப் பார்த்திருந்தவேளை
இடியென எம் இதயத்தில் வந்திறங்கியது - உன்
அகால மரணச் செய்தி - துடிதுடியென
துடிக்கிறது எம் நெஞ்சம் தாங்குமா எம் இதயம்
வருடங்கள் பல ஆனாலும்
வற்றாது உன் நினைவூற்று......
ஓம் சாந்தி!!!

- குடும்பத்தினர்.

*வெற்றிகாடு,*
*கரணவாய் தெற்கு, கரவெட்டி.*

(26034) (24-13-16)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3207233 இருந்து
3224274 வரை
சீட்டிழுப்பு இல. 1463
திகதி 20.12.2003



## வெற்றி எண்கள்

**11 18 20 39 40**

போனஸ் எண் **10**

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்பட்டுள்ளது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 97 | 10,000/- | 970,000/- |
| 3 | 5,381 | 500/- | 2,690,500/- |
| 2 | 89,300 | 20/- | 1,786,000/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 11ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 109,079 | 10/- | 1,090,790/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ருபா.8,037,290/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா.1,500,000/-

தொடர் இல. 2255431க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 24ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3212612-7-30
3221694-5-66
3211532-5-00
3210745-8-35
3209311-8-01

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 536 |
| திகதி | 19.12.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5388264-5403224

வெற்றி இலக்கங்கள் **17 26 29 51**

லக்கினம்
மிதுனம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ருபா 1,736,850/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 330,093 | 10 | 3,300,930 |
| 2 இலக்கங்கள் | 30,291 | 20 | 605,820 |
| 1 இல + லக்கினம் | 29,921 | 30 | 897,630 |
| 2 இல + லக்கினம் | 2,758 | 100 | 275,800 |
| 3 இலக்கங்கள் | 805 | 500 | 402,500 |
| 3 இல + லக்கினம் | 71 | 5,000 | 355,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | |
| மொத்தம் | 393,944 | - | 6,337,680 |

மொத்தப் பரிசுத் தொகை ருபா.7,162,130/-

தொடர் இல. 4413148க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 23ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5399427-6-24
5392212-2-48
5388987-9-65
5396421-2-05
5394417-5-54

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

பல்வகை பழங்களினால், அவற்றின் தரச் சுவைக்கேற்ப

தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசத்தை இன்றே சுவைத்து மகிழுங்கள்.




sunquick

அதிக பழங்கள் அதிக கோப்பைகள்

Grey Worldwide

# உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் வழங்க அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.மாவட்டத்திலுள்ள உடல் கல்வி டிப்ளோமாதாரிகள் இனியும் காலம் தாழ்த்தாது மிகவிரைவில் அவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு உறுதியளித்துள்ளார்.

யாழ்.உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் தமது நியமனம் தொடர்பாக அண்மையில் அமைச்சரைச் சந்தித்து உரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் தமிழர் ஆசிரியர் சங்கப்பொதுச்செயலாளர் த.மகாசிவம் உட்பட கல்வி அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனர்.

உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் வேலைக்காக 3வருடங்கள் காத்திருந்தமை தனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது எனவும் இவ்விடயத்தில் இனியும் காலந்தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கொடித்துவக்கு தம்மிடம் கூறினார் என்று உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-4)


## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல்பருமன், உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய் பிரச்சினை, தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :
Dr.நவநீதன் DYNS.SMP.NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
பெருமாள் கோவிலடி வீதி,
யாழ்.பயனியர் விடுதி
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.

யோகாசனப் பயிற்சி வகுப்புக்களுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன.

(26167) (32-12-17)

முகாம் நடைபெறும் நாள்கள்:
டிசெம்பர் 21 ஆம் திகதிமுதல் 30ஆம் திகதிவரை.


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ!

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 15 - 02 - 1950



மறைவு 24 - 12 - 2000

ஓவியர் திலகம், வர்ணவாரிதி

### இரத்தினம் கனகராஜா

(கலைவாணி கலைக்கூடம், திருநெல்வேலி)

திதி:சதுர்த்தசி (23-12-2003)

வாழ்வினில் பல சுமைகள் சுமந்து
செய்தொழிலால் அனைத்தையும் வென்று
புதுவாழ்வு படைத்தவரே! - உமை
என்றும் நாம் மறவோம்!

பத்திரகாளி கோயிலடி,
அம்மன்வீதி,
திருநெல்வேலி. (சி-32192) (14-12-17-32) - குடும்பத்தினர்.

ஓம்விராட் விஸ்வப் பிரம்மனே நம

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



23.11.2003 சிவபதமடைந்தவரான
எமது குடும்பத் தலைவர்

### வல்லிபுரம் தருமலிங்கம்
(செல்லத்துரை)

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (23.12.2003) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- அன்பு மனைவி, பிள்ளைகள்.

தகவல்: இ.சுமன்ராஜ் (பேரன்)

துவாள வீதி,
இமையாணன், உடுப்பிட்டி. (26174) (26-12-17-32)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 15 - 02 - 1948



இறப்பு 22 - 11 - 2003

### அமரர் பொ. சண்முகலிங்கம்

அன்போடும் பாசத்தோடும் பழகிய சண்முகலிங்க ஐயாவே!
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 31ஆம் நாள் அஞ்சலி நிகழ்வும் இன்று (22.12.2003) திங்கட்கிழமை முற்பகலில் அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது.

இணுவில் மேற்கு,
இணுவில். (26172) (26-12-17-32) - குடும்பத்தினர்.

## ஒஸ்லோவுக்கு அறிக்கை

கொழும்பு,டிசெ.22

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக நோர்வே தூதரகம் அறிக்கை ஒன்றை ஒஸ்லோவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகமே இந்த அறிக்கையை அனுப்பி வைத்துள்ளது.

கடந்த வாரம் வடபகுதிக்கு விஜயம் செய்திருந்த நோர்வே தூதரகத்தின் முதலாவது செயலாளர், கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலணியைச் சேர்ந்த புலித்தேவனை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். இவர் வடபகுதிக்கு விஜயம் செய்த பின்னரே ஒஸ்லோவுக்கு இந்த அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கபட்டுள்ளது.

(ஐ-ரி)

## வெற்றிலை செய்கையாளர் பெரும் ஏமாற்றம்

சண்டிலிப்பாய்,டிசெ.22

அண்மையில் பெய்த பலத்த மழையைத் தொடர்ந்து வடலியடைப்பு, சில்லாலை, இளவாலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள வெற்றிலைச்செய்கை, நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியிருப்பதாக வெற்றிலைச் செய்கையாளர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலான வெற்றிலைகளில் சிகப்பு நிறப்புள்ளிகள் ஏற்பட்டு வருகின்றன என்றும்

இதனால், வெற்றிலையைச் சந்தைப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டு விடும் என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

(எ-135)


**நாகம்ஸ் சுன்னாகம்**

சூர்யா, ஜோதிகா மற்றும் பலர் நடித்த
காக்க காக்க (சினிமா)
தினசரி காட்சி : 11.00, 3.00. (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு - இரவு 7மணி

**லிபேட்டி அச்சுவேலி**



விஜய், ஜோதிகா, நடித்த
திருமலை (சினிமா)
காட்சிநேரம்: 10.30, 2.00, 6.30. (பி.நே.)

**நிறைஞ்சனால்**

இன்று முதல்
ஸ்ரீகாந்த், சினேகா நடிக்க
பார்த்திபன் கனவு (சினிமா)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி சனி ஞாயிறு JACKIE CHAN
நடித்த WHO AM I?
இரவு 8.45 இற்கு (பி.நே.)

**ராஜா யாழ்ப்பாணம்**

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 உனக்கு 18 (சினிமா)
காட்சிகள்: 10.30,2.30,6.30,9.30 (பி.நே.)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.




# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் அடுத்த வாரம் திறக்கப்படும்

கொழும்பு,டிசெ.22

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மீண்டும் அடுத்த வாரம் திறக்கப்படும்.

கலைப்பீடத்தில் முதலாம், 2ஆம், 3ஆம் வருட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை இந்த மாதம் 29ஆம் திகதி ஆரம்பிப்பதென பல்கலைக்கழக மூதவை தீர்மானித்துள்ளது.

கலைப்பீடத்தைச் சேர்ந்தவர்களுக்கான இறுதியாண்டு பரீட்சை அடுத்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும்.

பிரயோக விஞ்ஞானபீடத்தின் சகல பரீட்சைகளும் இந்த மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகும்.

முகாமைத்துவ பீட இறுதியாண்டுப் பரீட்சைகள் இந்தமாதம் 29 ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை நடைபெறும். ஏனைய ஆண்டுகளுக்கான பாட்சைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

## அரும்பொருள்கள் மீட்பு

கிளிநொச்சி, டிசெ.22

முல்லைத்தீவு உடையார் கட்டுப் பகுதியில் தொன்மைவாய்ந்த அரும்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

உடையார்கட்டு புருவில் பகுதியில் இந்த அரும்பொருள்கள் இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து தமிழீழ அரும்பொருள் காப்பகத்தைச் சேர்ந்த குழுவினரால் இப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (ஐ-ரி)

## கண்ணீர் அஞ்சலி

### சதாசிவம் சின்னையா ஆச்சாரியார்
(சின்னையா இரும்புத்தொழிலகம்)

செய்யும் தொழிலால்
சிறப்படைந்த உன்திறனை
என்றும் வியந்து மகிழ்ந்தவர்நாம் இன்று
நீங்கள் மறைந்த செய்தியறிந்து
ஆறாத் துயரடைந்தோம்.
ஆத்மா சாந்திபெற
எல்லாம் வல்ல பத்திரகாளியின்
பாதங்களை வேண்டுகின்றோம்.

கலாபூசணம் ஆ.ஜீவரட்ணம் குடும்பத்தினர்,
ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி.

(சி-32196)(32-12-17)

## கண்ணீர் அஞ்சலி

### சதாசிவம் சின்னையா
(சின்னையா இரும்புத்தொழிலக அதிபர்)

மெய்வருத்தம் பாராது
கைவருத்திப் பணிகள் செய்த
ஐயா! உங்கள்
அயரா உழைப்பின் பெறுமானம் கண்டு
பெரிதும் மகிழ்ந்திருந்தோம்
காலன் விரைவில் கடுகிவந்து
உங்களையேன்
கொண்டுசென்றான்?
பொல்லா வினையகற்றும்
வீரகத்தி விநாயகனின்
திருப்பணிகளில் சேர்ந்துழைத்த
சேவைகளை நாம் மறவோம்...
உங்கள் ஆன்மா சாந்தி பெறுக

பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்
ஆலய தேவஸ்தானம்.

(சி-32195)(32-12-17)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து சிவானந்தன் (குஞ்சுமணி)

கோயிலாக்கண்டி, கைதடியைச் சேர்ந்த சரவணமுத்து சிவானந்தன் அவர்கள் நேற்று (21.12.2003) ஞாயிற்றுக்கிழமை கைதடி மேற்கில் காலமானார்.

அன்னார் மங்கையாக்கரசியின் (தேவி) அன்புக் கணவரும் சிவரஞ்சினி, சிவகாஞ்சனா, சிவசுதன் (சுவிஸ்), சிவதர்சா (சுவிஸ்), சிவதர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பத்மசிறி, கிருஷ்ணகுமார், சிவராசா அபிராமி ஆகியோரின் அன்பு மாமனாரும் கிஷாந்தன், பிறிவினியா, வைஷ்ணவி, யசோதா, தனுசியா, சிவராம், சிவலக்ஷன், சிவலக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
கைதடி மேற்கு,
கைதடி. (26177)(32-12-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### கனகசபை பரராஜசேகரம்

அளவெட்டி, பெருமாக்கடவையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பரராஜசேகரம் அவர்கள் நேற்று (21.12.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் சக்திவேல (லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும் ஞானமதியின் மாமனாரும் சுலக்சனின் பேரனாரும் திருமதி சரஸ்வதி குமாரசாமி, ஞானசேகரம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.12.2003) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளையதம்பி வீதி,
பெருமாக்கடவை,
அளவெட்டி. (26176)(34-12-17)

தகவல்:
திருமதி சரஸ்வதி குமாரசாமி
(சகோதரி).

# சமாதான முயற்சி சீர்குலைந்தால் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு

கொழும்பு,டிசெ.22

சமாதான நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதால் நாட்டின் பொருளாதாரத்தில் பாதகமான விளைவுகள் ஏற்படும் என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

கம்பளையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான நடவடிக்கைகள் சீர்குலைந்தால் சர்வதேசத்தின் உதவிகளும் கிடைக்காதுபோகலாம்.

ஜனாதிபதியின் விசமத்தனமான நடவடிக்கைகள் சமாதானத்தில் மட்டுமல்ல பொருளாதார அபிவிருத்தி, சர்வதேசத்தின் நிதி உதவிகள் என்பவற்றிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது - என்று தெரிவித்தார். (ஐ-4-5)

## வடபகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யார் நிறுவனங்களாக பரவலாக்கப்படவிருக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் வட பிராந்தியப் பிரிவும் தனியார் நிறுவனமாக மாற்றம் பெறவிருக்கின்றது.

இத்தனியார் நிறுவனத்தின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் தனித்துவமாகச் செயற்படும்.

மின் உற்பத்தி, விநியோகம் மற்றும் நிர்வாகம் ஆகிய பணிகளை இந்த நிறுவனம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

நாட்டில் உருவாக்கப்படும் எட்டு தனியார் நிறுவனங்களும் தனித்தனியாக இயக்குநர் சபைகளைக் கொண்டு செயற்படும் என்றும் -

சகல நிறுவனங்களையும் மேற்பார்வை செய்யும் நிர்வாக அமைப்பு ஒன்றும் இயங்கும் என்றும் -

அவர் மேலும் கூறினார். (ஐ-3)

## பேரினவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலகத்தில் முற்பகல் 10.00 மணி முதல் சுமார் ஒரு மணிநேரம் இச்சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் குமரகுருபரன், தமிழ் காங்கிரஸின் வவுனியா மாவட்ட தலைவர் செந்தில்நாதன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ)

## இந்தியப்படைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெஞ்சங்களிலிருந்து மறைந்துவிடவில்லை. கறைபடிந்த அந்த வரலாற்றுக் காலத்தை எண்ணி மக்கள் வேதனையும் கவலையும் அடைந்துள்ளனர்.

விடுதலைக்காக இரத்தம் சிந்தி, உயிர்த்தியாகம் செய்த ஈழத் தமிழர்கள் இந்தியப் படையின் வருகை மூலம் தங்கள் வாழ்வியலில் மிக மோசமான தாக்கங்களை எதிர்கொண்டார்கள்.

அத்தகைய இந்தியப் படைக்கு நினைவுத்தூபி அமைக்க இலங்கை இராணுவம் முயல்வதை ஈழத்தமிழர்கள் கடைசிவரை எதிர்ப்பார்கள்.

இவ்வாறான திட்டத்தை சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் கைவிட்டுவிடவேண்டும் என்பதே எமது அவா.

இந்திய அரசு சிக்கலான - நடைமுறைக்குச் சாத்தியப்படாத - விடயங்களில் உள்நுழைவதை விடுத்து, சிங்கள ஆட்சியாளர்களால் காலங்காலமாக நசுக்கப்படும் ஈழத் தமிழர்களின் இன்னல்களைக் களைய இந்தியப் பிரதமர் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

அதுவே சொந்தளிப்புடன் இருக்கும் எமது மக்களின் மன உணர்வுகளை சாந்தப்படுத்தும் என்பதை அனைவருக்கும் உணர்த்துகின்றோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# புலிகளுடன் உடன்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் பிரபாகரனும் நானும் சேர்ந்து 2002ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் திகதி இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம்.

ஒரு தலைப்பட்சமாக விடுதலைப் புலிகள் முறித்துக் கொள்வதற்கு இது வெறுமனே இரு தலைவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தமல்ல; இரு சமூகங்களின் சார்பில் நாம் செய்துகொண்ட உடன்படிக்கை.

இப்படி ஒருதலைப்பட்சமாக செயற்படுகின்றபோது இதன் பிரதிபலிப்புகள் மிகப் பாரதூரமாக அமைந்துவிடும்.

★ *கேள்வி:-* அந்த ஒப்பந்தத்துக்குப் பின்னர் முஸ்லிம் காங்கிரஸில் பிரிவுகள், பிளவுகள் ஏற்பட்டுள்ளதால் எந்தப் பிரிவோடு பேசுவது என்ற யதார்த்த சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவது ஒத்திப்போடப்பட்டுள்ளதாகவும், முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகளின் பிரதிநிதிகளோடும், முஸ்லிம் தலைவர்களோடும் ஒட்டுமொத்தமாகப் பேசவிருப்பதாகவும் தமிழ்ச்செல்வன் கூறியிருக்கிறாரே?

✪ பதில்:- இது எந்தவிதப் பொறுப்புணர்ச்சியுமின்றி புலிகள் சார்பில் கூறும் விடயம். ஏற்கனவே நாங்கள் நாடாளுமன்றத்தில் ஓர் ஒத்திவைப்பு வேளை விவாதத்தைக் கொண்டு வந்து, முஸ்லிம் தரப்பைச் சேர்ந்த அனைத்து அரசியல் தலைவர்களும் ஒன்றாக இணைந்து ஒரு செய்தியைக் கூறியிருக்கிறோம்.

தனித்தரப்பாக பேச்சுக்களில் பங்குபற்றுவதற்குக் கொடுக்கப்பட்ட அந்த உத்தரவாதம் நிறைவேற்றப்பட வேண்டும்.

அவ்வாறு தனித்தரப்பாக தனிக் குழுவை அமைத்துக்கொண்டு - அரசுடனும் புலிகளுடனும் பேச்சுக்களில் ஒன்றாக அமர்ந்து பேசுவதற்கான அந்த நடவடிக்கையை முஸ்லிம்களாகிய நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

இதில், முஸ்லிம் காங்கிரஸுக்குள் உள்ள பிளவு என்று அவர்கள் காட்டும் விடயம் அவர்களைச் சார்ந்ததல்ல; எங்கள் தரப்பில் உள்ள பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி அவர்கள் (புலிகள்) தங்கள் பொறுப்பிலிருந்து தப்பித்தொள்ள முடியாது. எங்களுக்குள் உள்ள பிளவுகளைச் சுட்டிக்காட்டி - தாங்கள் பொறுப்புக்களைத் தட்டிக் கழிப்பதற்கு - புலிகளுக்கு எந்த அதிகாரமும் கிடையாது; அது அழகும் அல்ல.

நாளையே நாங்கள் எங்களுக்குள் உள்ள பிளவுகளைச் சரிசெய்துகொண்டு பேச்சுக்கு வரத் தயாராக இருக்கிறோம்.

இது சர்வதேச சமூகத்துக்கு முன்னால் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

மூன்றாம்தரப்பாக நாம் கலந்துகொள்ள வேண்டியிருப்பதை சர்வதேச சமூகமும் சுட்டிக்காட்டியுள்ளது.

டோக்கியோ மாநாட்டிலும் இது கூறப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, அரசுத் தரப்பினரும், பிரதமரும், ஏனைய அமைச்சர்களும், ஜனாதிபதியும் மற்றும் அவரது எதிர்க்கட்சியைச் சேர்ந்த மூத்த அமைச்சர்களும் கூட இந்த மூன்றாம் தரப்பு விடயத்தை நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

எனக்கும் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டில் முஸ்லிம்களைத் தனித்தரப்பாக ஏற்பது குறித்து எந்த உறுதியும் வழங்கப்படவில்லை என்று கூறுவதும் சரியல்ல. அது எழுத்தில் திட்டவட்டமாக உள்ளது. உடன்பாட்டின் மூலப்பிரதியை எங்கு வேண்டுமானாலும் சமர்ப்பித்து இதை நிரூபிக்கத் தயார். அவ்வாறு உறுதி வழங்கும் அந்த உடன்பாட்டின் கீழ் பிரபாகரன் தனது சொந்தக் கையெழுத்தை இட்டுள்ளார் - என்றார் ஹக்கீம். (ஐ-ரி)

## பாதுகாப்பு வலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசங்களில் புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

விரைவில் பிரதமருடன் இதுபற்றிக் கலந்துரையாடுவதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தனர்.

கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி தொடர்பாக பொதுமக்கள் பல கேள்விகளைத் தொடுத்தனர்.

ஆனந்தசங்கரி தொடர்பான விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளதால், அது தொடர்பாக இங்கு விவாதிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தேசிய நல்லிணக்க அரசில் கூட்டணி இணையுமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஆவணரீதியான உத்தரவாதம் தந்தால், அந்த அரசில் சேர்வது குறித்துப் பரிசீலிக்கலாம் என்பதில் அளித்தனர்.

இக்கூட்டத்தில் கூட்டணி ஆதரவாளர்கள் 150இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (ஐ-3)

## பாண் விலை அதிகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் 450 கிராம் பாணின் விலை இன்று முதல் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

இதுவரைகாலமும் 450 கிராம் நிறைகொண்ட பாண் 16 ரூபாவாக விற்பனைசெய்யப்பட்டது. ஆனால், மாவின் விலை அதிகரிப்பு விறகு மற்றும் தொழிலாளர் சம்பளமாற்றம் என்பவற்றின் காரணமாக பாணின் பெறுமதி 1 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு இன்று முதல் 17 ரூபாவாக விற்பனைசெய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்குச் சாதகமாகவிருந்த - அரசியல் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு - 1999 டிசெம்பரில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, அதில் போட்டியிட்டு அவர் வென்றார். அதையடுத்து உடனடியாகவே பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னால் அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஆனால், இப்போது புதிய தகவல் வெளியாகியுள்ளது.

அந்தத் தகவலின்படி -

1999 டிசெம்பர் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டதும் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அப்படியிருந்தும் அவர் தம்முடைய முந்திய பதவிக்காலம் 2000 நவம்பரில் முடியும் தறுவாயில் மீண்டும் ஒருமுறை இரண்டாவது தடவையாகப் பதவி வகிப்பதற்குப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இது எவருக்கும் தெரியாதபடி இரகசியமாக நடந்தது. பதவி ஏற்பு வைபவமும் பிரதம நீதியரசர் சரத் என்சில்வா முன்னிலையில் நடந்தது.

இப்படியான செய்திகளே இப்போது கசியவிடப்பட்டிருக்கின்றன.

ஆனால், இந்தச் செய்திகளுக்கு அடிப்படையான விடயங்கள் அரசமைப்புக்கு முரணானவை என்று சட்டவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது விடயத்தில் அரசமைப்பின் பிரிவு 30(4), பிரிவு 38(அ), அரசமைப்பின் 3ஆவது திருத்தத்தின் பிரிவு 2(அ) (1), பிரிவு 3 ஆகியன தெளிவான வழிகாட்டுதல்களைத் தருகின்றன.

அவற்றின்படி, சம்பந்தப்பட்ட இரண்டாவது தேர்தல் நடந்ததினத்திலிருந்து ஆறு வருடங்களுக்கே தமது இரண்டாவது பதவிக் காலத்தை ஜனாதிபதி வகிக்க முடியும்.

அதன் பிரகாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் 2005 டிசெம்பருக்கு மேல் நீடிக்காது. ஒருவருடம் கூடுதலாக 2006 நவம்பர்வரை அவர் ஜனாதிபதிப் பதவியில் இருக்க முடியாது என அந்த வட்டாரங்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தன. (ஐ)


அனுமதிக்கு முந்துங்கள்

வடமராட்சியின் பிரபல ஆசிரியர்

MR.B.JOTHY

வழங்கும்

SPOKEN ENGLISH WITH GRAMMAR

O/L எடுத்தவர்களுக்கான புதிய பிரிவு ஆரம்பம்:

25.12.2003

(பி.ப. 2 மணிக்கு)

ஞானோதய அக்கடமி

சங்கத்தானை, சாவகச்சேரி.

வேகமாக விற்பனையாகின்றது

ஆசிரியர் போட்டிப் பரீட்சை - வழிகாட்டல் நூல்

★ 200இற்கு மேற்பட்ட மாதிரிகள்

★ இறுதியாக நடைபெற்ற வினாவிடை

★ பொது அறிவு வினாவிடை

★ ஜனவரி 25 எதிர்பார்க்கை வினாவிடை

இலவசம்

BY:P.அமல்தாசன்

மிகச் சொற்ப பிரதிகளே விற்பனையாகின்றன

ஆசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்

கலையகம்

ஆவரங்கால்.

புதிய பிரிவு -II

SPOKEN ENGLISH

BY: BRITTO

செவ்வாய், வியாழன்

10.30a.m.

மாபெரும் இலவச கணனிக் கருத்தரங்கு

கணனி விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்

உள்ளடக்கம்

* Computer Systems & Systems Engineering
* Information Technology
* Computer Applications (including MS Office)
* e-mail & Internet Technology
* Computer Programming (VB, C++ Java)
* Database Management
* Data Communicatio and Networking

கருத்தரங்கினூடான புலமைப்பரிசில்கள்

திகதி 27/12/2003 - 29/12/2003 (9.00 AM to 4.00 PM)

* பாடசாலை மாணவர்கள் (O/L & A/L)
* அரச உத்தியோகத்தர்கள்
* பெற்றோர்கள்

இன்றே உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

பதிவுகளிற்கு

STP Your Partner in IT Solution


73, Palaly Road, Kantharmadam. Jaffna T.P:2222674

Branch: Sankaththanai, Chavakachcheri

தென்னிந்தியாவில் இருந்து

மூன்றாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்

ராஜகுருசாமி அவர்கள்


புத்தாண்டை முன்னிட்டு 2004 ஆம் ஆண்டு புதுப்பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வருகைதந்துள்ளார்.

பார்க்கும் நேரம் காலை 9 - 6 மணி

கைரேகை மட்டும் 9 - 1 மணிவரை

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்

★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்

இவற்றில் பல வருட அனுபவமும் புகழும் பெற்றவர்.

ராஜகுருசாமி T.P. 5867

மில்லெனியம் மல்ரி கொம்பிளக்ஸ்

60/1 (T12), TEMPLE ROAD [Near ICBC], JAFFNA.





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.